KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Reality Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 03 ஜனவரி 2025 இதழ்:- 01

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness I No medical Life
Disability Income I Mortgage Life
Travel & Visitor I Life Insurances.
RRSP I RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins
Manulife

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

## வடக்கு மாகாணசபை இல்லாமல் இருப்பது சிறப்பு! யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கிளப்பும் சர்ச்சை?



வடக்கு மாகாண சபை இல்லாமல் இருப்பது சிறப்பு போல இருக்கின்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சும்மா கத்திக் கொண்டிருப்பதைப் போல மாகாணசபை இருந்தாலும் அங்கும் கத்திக் கொண்டு தான் இருப்பார்கள். இப்போது அதிகாரிகளால் மாகாண சபை சிறப்பாக நடத்தப்படுகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.(3ம் பக்கம் பார்க்க)

**ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலம் வாரம் தோறும் வாசிக்கலாம்**



## மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களே தலைவர் பதவியை பறிப்பதற்குச் சதி செய்தனர் என மாவை புலம்பல்!

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களால் நிராகரிக்கப் பட்ட ஒரு சிலர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்குவதற்குத் திரை மறைவில் சதி முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றார்கள் எனவும் அவர்களே எனது தலைவர் பதவியைப் பிடுங்குவதில் குறியாக இருந்தார்கள் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், கட்சியின் தற்போதைய அரசியல் குழுத்தலைவருமான (3ம் பக்கம் பார்க்க)

# இந்திய - இலங்கை ஒப்பந்த அமுலாக்கல்:- "பந்து" நெடுநாளாக இலங்கைத் தமிழர் கைகளில் தான்

## யாழ்.மருத்துவமனையில் நடப்பது என்ன? விபரங்கள் உள்ளே!

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! தாயகத்தில் மாரி மழையுடன் சேர்ந்து பாரிய அனர்த்தங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளை உணவுப் பொருட்கள் மற்றும் உடை, போர்வை போன்ற அத்தியாவசிய தேவை அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்கும் உடனடித் தேவையாகவுள்ளது. குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்த நாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை ஈழநாடு பத்திரிகையின் அறப்பணி. விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

## www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



21 Years Real Estate Experience

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

Team SIVA
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
Sales Representative B.Comm.
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Simcoe St N. & Conlin Rd


**Oshawa** **$279,000**
0 Beds • 1 Bath • 1 Rooms
Welcome To University Studios!


### Sheppard Ave & Allen Rd


**Toronto** **$619,000**
2+1 Beds • 2 Baths • 4+1 Rooms
Close To Subway, Ttc, York University

### Neilson/Tapscott

**Scarborough** **$445,000**
2 Beds • 2 Bath • 5 Rooms
Close to the Hwy 401 and the TTC


### Kennedy Rd / Hwy 401

**Scarborough** **$699,000**
2+1 Beds • 2 Bath • 6 Rooms
Freshly painted & renovated!


### Sheppard & Neilson

**Malvern** **$699,900**
3 Beds • 2 Baths • 6 Rooms
Low Maintenance Fees!


### Simcoe St N/ Brittania Ave

**Oshawa** **$770,000**
4 Beds • 3 Baths • 9 Rooms
Corner lot Just like Semi Townhouse


### McLevin Ave & Morningside


**Malvern** **$880,000**
3+1 Beds • 3 Baths • 6+2 Rooms
Finished Basement

### Townline Rd & Shankel Rd

**Oshawa** **$999,900**
3 Beds • 4 Baths • 8 Rooms
Close To Highway 401, 418, 407

### Sheppard Ave E / Neilson Rd

**Scarborough** **$842,000**
3 Beds • 3 Baths • 6+2 Rooms
FULLY RENNOVATED


### Church St N & Rossland Rd W

**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Hardwood flooring throughout


### Church St N & Rossland Rd W

**Ajax** **$899,999**
3 Beds • 3 Baths • 6 Rooms
Upgraded Hardwood Floors


### Kellough St/ Mcneil St

**Innisfil** **$1,295,000**
4+1 Beds • 5 Baths • 11+3 Rooms
Open concept, large eat-in kitchen

### Ninth Line/Donald Cousens

**Markham** **$630,000**
2 Beds • 2 Baths • 4 Rooms
Minutes to Stouffville Hospital

### Mara & King

**Beaverton** **$729,800**
4 Beds • 3 Baths • 9 Rooms
2300 Square Foot Home

### Finch Ave E/ Morningside Ave
FOR LEASE

**Scarborough** **$2,500**
3+1 Beds • 3 Bath • 10+3 Rooms
Nicely Maintained And Cleaned

### Scarborough Golf/Lawrence Ave
FOR LEASE

**Scarborough** **$1,900**
2 Beds • 1 Bath • 4 Rooms
Lovely Corner Bungalow

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

# வடக்கு மாகாணசபை இல்லாமல் இருப்பது சிறப்பு! யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கிளப்பும் சர்ச்சை?

வடக்கு மாகாண சபை இல்லாமல் இருப்பது சிறப்புபோல் இருக்கின்றது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சும்மா கத்திக் கொண்டிருப்பதைப் போல மாகாண சபை இருந்தாலும் அங்கும் கத்திக் கொண்டு தான் இருப்பார்கள். இப்போது அதிகாரிகளால் மாகாண சபை சிறப்பாக நடத்தப்படுகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சி.சிறிசற்குணராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 01 ஜனவரி 2025 பல்கலைக்கழக மாணவர்களுக்கு வடக்கு மாகாண சபையால் நிதியுதவி வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலேயே துணைவேந்தர் இவ்வாறு தெரிவித்தார்.



வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் 1984ஆம் ஆண்டு காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்தவர். அவர் படித்த காலம் மிக நெருக்கடியானது. அதைப் போலத் தான் அவர் பணிக்குச் சேர்ந்த 1991ஆம் ஆண்டு காலமும் நெருக்கடியானது. அவர்கள் நெருப்பாற்றை நீந்திக் கடந்துதான் பணியாற்றினார்கள். வடக்கு மாகாணத்தில் உள்ள அதிகாரிகள் கடமையுணர்வு மிக்கவர்கள். வடக்கு மாகாணத்தின் பலமே அவர்கள் தான். இப்போது தான் வடக்கின் ஆளுநரைக் கூட யாழ்ப்பாணத்திலிருந்து கண்டு பிடித்திருக்கின்றார்கள். அரசியல்வாதிகளையும் கொழும்பிலிருந்து கொண்டு வரும் ஒரு காலம் இருந்தது. எங்களால் செய்ய முடியாது என்ற எண்ணம் இனியாவது மாற்றப்பட வேண்டும்.

வடக்கு மாகாண ஆளுநராக வேதநாயகனை இந்த அரசாங்கம் தேர்ந்தெடுத்தன் ஊடாக வடக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின், தேசிய மக்கள் சக்தியின் செல்வாக்கு ஒரு படி மேலே கூடி விட்டது. வடக்கு ஆளுநரும் அவரது அணியும் இந்த மாகாணத்தில் சிறப்பாக வேலை செய்கின்றார்கள். அவர்களை அப்படியே சேவை செய்ய விட்டால் போதும் என நினைக்கின்றேன்.

மாகாண சபை இல்லாமல் இருப்பது நல்லம் தான். இல்லாவிடின் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் சத்தம் போட்டுக் கொண்டிருப்பதைப்போல அங்கும் சத்தம்தான் போட்டுக் கொண்டிருப்பார்கள். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் 'மாஸ்ரர் பிளான்' இருக்கா என்று கேட்பார்கள். ஆனால் இந்த அதிகாரிகள்தான் இங்கிருந்து எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்றார்.

# மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களே தலைவர் பதவியை பறிப்பதற்குச் சதி செய்தனர் என மாவை புலம்பல்!

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சிலர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்குவதற்குத் திரைமறைவில் சதி முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள் எனவும் அவர்களே எனது தலைவர் பதவியைப் பிடுங்குவதில் குறியாக இருந்தார்கள் எனவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும், கட்சியின் தற்போதைய அரசியல் குழுத் தலைவருமான மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலைமை தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார். குறுக்கு வழியில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நுழைந்தவர்கள், தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கட்சி இருக்க வேண்டும் என்று எண்ணுகின்றார்கள். அவர்களின் சுயநல நடவடிக்கைகளால் தான் எமது கட்சி பலவீனமானது.

போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முடக்க வேண்டும் என்று தென்னிலங்கை விரும்பியது. ஆனால் நானும் முன்னாள் தலைவர் சம்பந்தனும் தமிழரசுக் கட்சியைப் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் பாதுகாத்தோம்.

இதெல்லாம் எமது கட்சியைத் தற்போது முடக்க முயலும் சூழ்ச்சிக்காரர்களுக்கு மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு நன்கு தெரியும்.

தமிழரசுக் கட்சிக்குள் வந்து அரசியல் முகவரி தேடிய இந்தச் சூழ்ச்சிக்காரர்கள், கட்சியை முடக்க முயல்வது அசிங்கமானது. அவர்கள் நன்றி மறந்தவர்கள். அவர்களின் எண்ணம் நிறைவேற நாம் ஒரு போதும் இடமளியோம் எனவும் தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் மாவையும் மக்களால் நிராகரிக்கப்பட்டவர் என்பதை விட சுமந்திரனை கட்சிக்குள் கொண்டு வந்து வளர்த்தவர் சம்பந்தர் அல்ல. மாவை தான் என்பது பலர் அறியாத விடயம். ஆனால் மாவையின் வயோதிபமும் மகனை அரசியலுக்குள் கொண்டு வர வேண்டும் என்ற தீராத அவாவுமே அவரை இன்று இந்நிலைமைக்கு ஆளாக்கியது என்பதை அவர்



இன்னமும் உணராமையே மிகப் பெரிய அவலமாகும். பதவி ஆசை என்பது யாரைத்தான் விட்டது?






## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# அரங்கலயவில் ஆயுதமேந்தாத பொதுமக்களைக் கொலை செய்வதற்கு விரும்பவில்லையென ஓய்வுக்கு முன் முன்னாள் இராணுவத்தளபதி தெரிவிப்பு!



அரகலயவின் போது ஆயுதமேந்தாத பொதுமக்களை கொலை செய்வதற்கு தான் விரும்பவில்லை, என முன்னாள் இராணுவதளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். சவேந்திர சில்வா தனது ஓய்விற்கு முன்னர் வெளியிட்டுள்ள விரிவான அறிக்கையில் 2022 அரகலய உட்பட தனது பதவிக்காலத்தில் இடம் பெற்ற குறிப்பிடத்தக்க சம்பவங்கள் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

2022 உள்நாட்டு குழப்பம் எனது இராணுவ வாழ்க்கையின் மிகவும் குழப்பமான ஒரு தருணம் அது எனது உண்மையான நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதை வெளிப்படுத்தியது. என தெரிவித்துள்ள அவர் தேசத்திற்கு உள்நாட்டிலிருந்தோ வெளிநாட்டிலிருந்தோ ஆபத்து ஏற்பட்டால் தேசத்தை பாதுகாப்பதற்காக தயாராகயிருக்கும் உத்தியோகபூர்வ இராணுவமே தேசத்தின் இராணுவம் என அவர் தெரிவித்துள்ளார்.

2022 எழுச்சி ஒரு உள்நாட்டு பொது அமைதியின்ம.ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்துவதற்கு ஆகக் குறைந்த பலத்தையே பயன்படுத்துமாறு நான் இராணுவீரர்களிற்கு உத்தரவிட்டேன், இராணுவத்தின் துப்பாக்கி பிரயோகத்தினால் பொது மக்களில் ஒருவர் கூடஉயிரிழப்பதை நான் விரும்பவில்லை என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

ஆயுதமேந்தாத பொதுமக்களை எனது அதிகாரத்தை பயன்படுத்தி படுகொலை செய்யும் ஒருவனாக நான் மாறவிரும்பவில்லை, அதன் காரணமாக நாடு குழப்பத்தில் சிக்கவில்லை, அயல்நாடுகளில் பொது மக்களின் போராட்டங்களை ஒடுக்குவதற்காக கையாளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்டுள்ள எதிர்மறையான விளைவுகள் இதற்கு சிறந்த உதாரணம் எனவும் தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ள அவர் தனக்கு தனிப் பட்ட நோக்கங்கள் இருந்தாக தெரிவிக்கப்படுவதை மறுத்துள்ளார்.

அதிகார வெறி பிடித்த ஆட்சியாளர்கள் கூறுவது போல அரசாங்கத்தை கவிழ்க்கவேண்டும் என்ற மோசமான நோக்கம் என்னிடம் இல்லை, வெளிநாடொன்றின் சதுரங்க காயாக மாற வேண்டும் அல்லது வெளிநாட்டு தூதரகத்தின் செல்லப்பிள்ளையாக விளங்க வேண்டும் என்ற நோக்கமும் எனக்கில்லை என சவேந்திரசில்வா தெரிவித்துள்ளார்.

2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் போது இந்தக் கொலை வெறியனின் தலைமையில் இராணுவம் நடத்திய படுகொலைகள், காணாமல் ஆக்கப்பட்டோர் நிகழ்வுகள் எல்லாம் அரங்கேறியது. இவரது மனதி உரிமை மீறலுக்காக அமெரிக்கா பயணத் தடை விதித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் புலிகளால் மகிந்தாவுக்கு உயிராபத்துக் கிடையாது!

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஒருபோதும் எதுவிதமான உயிரச்சுறுத்தலும் இல்லை என பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் கொழும்பில் செவ்வாய்க் கிழமை செய்தியாளர் சந்திப் பொன்றை நடத்தியிருந்தார். குறித்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

மகிந்த ராஜபக்சவின் மீது புலிகளுக்கு எந்தவொரு வைராக்கியமும் இல்லை. போர் இடம் பெற்ற தருணத்திலும் அவருக்கு எவ்வித உயிர் அச்சுறுத்தலும் இருக்கவில்லை. மகிந்த ராஜபக்ச மீது குண்டுத் தாக்குதலை நடத்தவோ அல்லது வேறு விதமான தாக்குதலை நடத்தவோ இல்லை.


மகிந்த ராஜபக்ச தனியாகவா யுத்தம் செய்தார்? நாம் யுத்தம் செய்யவில்லையா? யுத்தத்துக்கு தலைமை தாங்கிய இராணுவத் தளபதியான எனது முழுமையான பாதுகாப்பை 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறு வெளியாகுவதற்கு முன்னரே நீக்கினர். அப்போது எனக்கு அச்சுறுத்தல் இருக்கவில்லையா? வெலிகடை சிறையில் என்னை அடைத்த தருணத்தில் புலிகள் அமைப்பை சேர்ந்த ஒருவர் சிறையில் இருந்தார்.

அத்தருணத்தில் எனக்கு எவ்வித விசேட பாதுகாப்பும் அளிக்கப்படவில்லை. பின்னர் நீதிமன்றத்துக்கு அழைத்து வந்த தருணத்தில் இராணுவத் தலைமையகத்தில் என்மீது தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்த வந்திருந்த மொரிஸ் என்ற நபரும் நானும் ஒரே வாங்கில் தான் அமர்ந்திருந்தோம்.

அப்போது எனக்கு அச்சுறுத்தல் இருக்கவில்லையா? மகிந்த ராஜபக்சவிற்கு எதிராக ஒருபோதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்த மாட்டார்கள். மகிந்த ராஜபக்ச பிரபாகரனுடன் சமதான பேச்சுகளை நடத்தி யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வருவதாகவே ஆட்சிக்கு வந்தார். போர் முடிவதற்கு 3 மாதங்கள் இருந்த தருணத்தில் போர் நிறுத்தமொன்றையும் அறிவித்தார்.

பிரபாகரன் உள்ளிட்ட தலைவர்கள் தப்பித்துச் செல்லவே அவர் அந்த நடவடிக்கையை எடுத்திருந்தார். போர் நிறுத்த அறிவிப்பு காரணமாக மூன்று மாதங்கள் போர் பின்நோக்கிச் சென்றதுடன், இராணுவத்தினரும் 5 கிலோ மீற்றர் தூரம் வரை பின்னோக்கி நகரும் நிலை ஏற்பட்டது.

மகிந்த ராஜபக்ச புலிகளுடன் நெருங்கிய உறவை பேணியிருந்தார். அதனால் புலிகளால் அவரது உயிருக்கு ஒரு போதும் ஆபத்து இல்லை என்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.


# வங்கிக் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

Save 80%

- கடன் 80% குறைய நடவடிக்கை
  Reduce your debts upto 80%.
- கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
  Stop all interest on your debts.
- கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
  Stop collection calls, legal action & garnishments.
- உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
  Protect all your assets (House, Car, RRSP, RESP).
- மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
  Make one monthly patment to all of your creditors.
- வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
  Glve you solutions without bankruptcy.


CRC CREDIT RECOVERY CANADA

10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation

Over 20 Years Experience in the field of Insolvency

Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca



# புதிய இராணுவ - கடற்படைத் தளபதிகள் நியமனம்



இராணுவம், கடற்படைத் தளபதிகள் மற்றும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா ஆகியோரின் சேவை நீடிப்பு நிறைவடைந்துள்ளதோடு, விமானப்படை தளபதியின் சேவை நீடிப்பு அடுத்த மாதம் நிறைவடையவுள்ளது. அதற்கமைய 01 ஜனவரி 2025 புதன்கிழமை இராணுவ மற்றும் கடற்படை தளபதிகள் பதவியேற்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேவின் ஓய்வையடுத்து, இலங்கை இராணுவத்தின் 25ஆவது தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ பதவியேற்கவுள்ளார். மேலும்கடற்படையின் தலைமை அதிகாரியான ரியர் அட்மிரல் காஞ்சன பனகொட கடற்படையின் 26 ஆவது தளபதியாக பதவியேற்க உள்ளார்.

பண்டாரவளை எஸ். தோமஸ் கல்லூரியின் பழைய மாணவரான ரியர் அட்மிரல் பனாகொட, 1989ஆம் ஆண்டு நிறைவேற்றுப் பிரிவின் 19ஆவது உள்வாங்கலின் கெடட் அதிகாரியாக கடற்படையில் சேர்ந்தார். இதேவேளை விமானப்படையின் தற்போதைய தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்சவின் பதவிக்காலம் அடுத்த மாதம் நிறைவடையவுள்ளது.

ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகேவுக்கான பாரம்பரிய அணி வகுப்பை இலங்கை இராணுவம் கடந்த திங்கட்கிழமை நடத்தியது. மேலும் பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவிக்கு ஓய்வுபெற்ற இராணுவ, விமானப் படை அல்லது கடற்படைத் தளபதி ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அர்ச்சுனா கூறிய விடயங்கள் உண்மையே! அர்ச்சுனா சார்பில் நீதிமன்றத்தில் தெரிவிப்பு!

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் கூறிய விடயங்கள் உண்மையே என அர்ச்சுனா சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.





பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனிடம் 100 மில்லியன் ரூபாய் நஷ்ட ஈடு கோரி யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி யாழ். மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

வழக்காளியான வைத்திய நிபுணர் சத்தியமூர்த்தி இறுதி யுத்தம் முடிவடைந்த நிலையில் தடுப்புக் காவலில் இருந்த போது அங்கு அவருக்கு நிகழ்ந்த விடயங்கள் தொடர்பில் அவருக்கு அவதூறாக எதிராளி வைத்தியர் இராமநாதன் அசர்ச்சுனாவினால் செல்லப்பட்ட விடயங்கள் மற்றும் கடந்த 09ஆம் திகதி இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலைக்குள் நுழைந்து வைத்திய நிபுணர் சத்தியமூர்த்தியுடன் சில வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டு, அவருடன் பிணக்கிற்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பிலும், அன்றைய தினத்தில் இராமநாதன் அர்ச்சுனா தன்னுடைய முகப்புத்தகத்தில் வெளியிட்ட காணொளி ஊடாக அவதூறு பரப்பப்பட்டதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு 30 டிசம்பர் 2024 விசாரணைக்கு எடுத்து கொள்ளப் பட்ட போ, எதிராளியான பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, தனது கட்சிக்காரர் கூறிய விடயங்கள் அனைத்தும் உண்மை எனவும், அவற்றை மன்றில் நிரூபிக்க தயாராக இருக்கிறோம் என மன்றில் தெரிவித்தார். இந் நிலையில் குறித்த வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு விசாரணைக்காக திகதியிடப்பட்டுள்ளது.

# நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளியோம்



இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளிக்க மாட்டோம் என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

இன, மத வன்முறைகளைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், நாட்டில் இன, மத ரீதியிலான சில பிரச்சினைகள் இருக்கின்றமை உண்மைதான், அவற்றுக்கு நாம் தீர்வு காண்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் அந்தப் பிரச்சினைகளை ஊதிப்பெருக்கும் வகையில், வன்முறைகளைத் தூண்டும் வகையில் எவராயினும் கருத்துக்களை வெளியிட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இந்த நாட்டில் மீண்டும் இரத்த ஆறு ஓட இடமளிக்க மாட்டோம் எனவும், வேரூன்றியிருந்த தேசிய இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறியதால் தான், வடக்கு மற்றும் தெற்கு இடையேயான உறவு அறுந்ததாகவும், பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அந்த நிலைமை மீண்டும் வர இடமளியோம் எனவும் புதிய அரசமைப்பின் ஊடாகத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி மேலும் குறிப்பிட்டார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா 23 மார்ச் 2025
சங்கீத சங்கமம் 2025

# 2025:- தீர்க்கதரிசிகளின் ஒரே மாதிரியான கணிப்புக்கள்



உலகின் புகழ் பெற்ற தீர்க்கத்தரிசிகளான பாபா வங்கா மற்றும் மைக்கேல் டி நோஸ்திரதாம் ஆகியோர் 2025 ஆம் ஆண்டிற்கான பெரும்பாலும் ஒரே மாதிரியான கணிப்புகளை வெளியிட்டுள்ளனர்.

துல்லியமான கணிப்புகளுக்கு பெயர் பெற்ற இந்த புகழ்பெற்ற தீர்க்கதரிசிகள், மனிதர்களுடன் அன்னிய தொடர்பு, விளாடிமிர் புட்டின் மீதான கொலை முயற்சி, பயங்கரவாத தாக்குதல்கள் உட்பட வியக்கத்தக்க வகையில் ஒரே மாதிரியான தீர்க்க தரிசனங்களைச 2025ஆம் ஆண்டுக்கு கணித்துள்ளனர்.

இவர்கள் 470 வருட இடைவெளியில் பிறந்திருந்தாலும், நவீன வரலாற்றில் இதுவரை நடக்காத சில பெரிய நிகழ்வுகளை இருவரும் கணித்துள்ளனர்.

பாபா வங்கா ஒரு பல்கேரிய தீர்க்கத்தரிசி ஆவார், அவர் 1996 இல் இறந்தார். அவர் பல்கேரியாவின் நோஸ்திரதாம் என்றும் அழைக்கப்படுகிறார். பாபா வாங்காவின் கணிப்புகள் 85 சதவிகிதம் துல்லியமாக இருப்பதாக நம்பப்படுகிறது.

2004இல் இந்தோனேசியா சுனாமி, சோவியத் யூனியனின் வீழ்ச்சி, இளவரசி டயானாவின் மரணம் மற்றும் செப்டம்பர் 11 பயங்கரவாதத் தாக்குதல்கள் போன்ற சில வரலாற்றுத் தருணங்களை அவர் முன்னறிவித்தார். அது தவிர, 2022 இல் அவுஸ்திரேலியா மற்றும் ஆசியா வெள்ளத்தால் பாதிக்கப் படும் என்று அவர் கணித்தார்.

அந்த ஆண்டு ஜீலைக்கு முன்பு அவுஸ்திரேலியா மூன்று முறை வெள்ளத்தில் மூழ்கியது. வடக்கு அரைக்கோளத்தில், முக்கிய நகரங்கள் கடுமையான வறட்சியை சந்திக்கும் என்றார்.இது இங்கிலாந்து, இத்தாலி மற்றும் போர்ச்சுகலில் காணப்பட்டது. இந்த நிலையில், பாபா வாங்காவின் கூற்றுப்படி 2025 ஆம் ஆண்டு மோசமானதாக இருக்கிறது.

மனிதகுலத்தின் வீழ்ச்சி 2025 இல் தொடங்கும் என்று அவர் கணித்துள்ளார். ஐரோப்பாவில் ஒரு பெரிய போர் வெடிக்கும் என்று அவர் கூறினார். போர் நமது மக்கள் தொகையில் கணிசமான பகுதியை அழிக்கக்கூடும் என்றும் அவர் கூறினார்.

அதேநேரம், ரஷ்யா உயிர் வாழ்வது மட்டுமல்லாமல் உலகில் ஆதிக்கம் செலுத்தும் என்றும் அவர் கணித்தார். எனினும், 2023 இல் உலகம் அழிந்துவிடும் என்றும் அவர் கூறியதாகக் கூறப்படுகிறது. அணு உயிரி ஆயுதங்களும் சூரிய புயலும் அதற்குக் காரணமாக அமைந்திருந்தது.

2025 இல் பாபா வாங்காவின் மற்றொரு கணிப்பு என்னவென்றால், பூமி வேற்று கிரக உயிரினங்களை சந்திக்கும். டெலிபதி உண்மையாக மாறக்கூடும். அது தவிர, விஞ்ஞானிகள் ஆய்வகத்தில் மனித உறுப்பை வெற்றிகரமாக வளர்க்க முடியும் என்றும் அவர் கூறினார். மேலும், 2028 ஆம் ஆண்டில் வெள்ளி கிரகம் மீதான விண்வெளி ஆய்வு தொடங்கும், அதனால் உலகம் ஒரு புதிய வாழ்விடத்தைக் கண்டுபிடிக்கும் என்றும் அவர் கூறினார்.

இது தவிர பாபா வாங்காவின் தீர்க்கதரிசனங்கள், அமெரிக்க மேற்கு கடற்கரையில் நிலநடுக்கங்கள் மற்றும் செயலற்ற எரிமலைகள் வெடிப்பது உட்பட தொடர்ச்சியான பேரழிவு இயற்கை பேரழிவுகளையும் முன்னறிவிக்கிறது.

********

450 ஆண்டுகளுக்கு முன்பு இறந்த போதிலும், நோஸ்ட்ராடாமஸ் தொடர்ந்து தீர்க்கதரிசனமான விடயங்களை கூறியுள்ளார்.

1566இல் அவர் இறப்பதற்கு முன், அவர் 94 கவிதை அறிக்கைகளின் தொகுப்பை எழுதினார் மற்றும் 1555 ஆம் ஆண்டு தனது புத்தகமான Les Prophéties ஐ வெளியிட்டார். அவர், தனது நண்பரும் முன்னாள் மன்னருமான இரண்டாம் ஹென்றி 40 வயதில் 'இளம் சிங்கத்தின்' கைகளில் இறந்து விடுவார் என்று துல்லியமாக கணித்தார். அது மட்டுமல்லாமல்,(20ம் பக்கம் பார்க்க)

# இலங்கை முன் வைக்கும் புதிய திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு! சீன அறிவிப்பைத் தொடர்ந்து விசேட கலந்துரையாடல்களில் அநுர அரசு!



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மரியாதை செலுத்தும் வகையில், சீன விஜயத்தின் போது இலங்கை முன்வைக்க விரும்பும் எந்தவொரு புதிய திட்டங்களுக்கும் முழு அளவிலான ஒத்துழைப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள நிலையில், முன்வைக்க உத்தேசிக்கப்படுகின்ற புதிய திட்டங்கள் குறித்து அரசாங்கத்துக்குள் விசேட பல சுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் இந்திய விஜயம் பல சர்ச்சைக்குரிய விடயங்களுடன் நிறைவடைந்தது. நாட்டுக்கு பாதகமான பல ஒப்பந்தங்களில் ஜனாதிபதி கைச்சாத்திட்டதாக பலரும் குற்றம் சுமத்திய போதிலும், அவ்வாறான தீங்கு விளைவிக்கும் ஒப்பந்தங்கள் எதிலும் கைச்சாத்திடவில்லை என அரசாங்கம் அறிவித்தது. இதன் காரணமாக இந்திய விஜயத்தை தொடர்ந்து ஜனாதிபதியின் அடுத்த சீன விஜயத்தையே பலரும் உற்று நோக்குகின்றனர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் 12ஆம் திகதி சீனா செல்லவுள்ளார். அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியா, அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ஜனாதிபதியின் சீன விஜயத்தை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றன. இதற்குக் காரணம், சீனாவை நோக்கிய ஒரு சார்பு தன்மை அரசாங்கத்திடமிருந்து வெளிப்பட தொடங்கியுள்ளதாக கொழும்பை தளமாக கொண்ட மேற்குலக இராஜதந்திர தகவல்கள் சந்தேகங்களை வெளியிட்டுள்ளன.

அது மாத்திரம் அன்றி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன விஜயத்தின் பின்னரே அரசாங்கத்தின் வெளிவிவகார கொள்கை குறித்து ஒரு தெளிவான பார்வையை அனைவராலும் உணர முடியும். எவ்வாறாயினும் அண்மைய புவிசார் அரசியல் நிகழ்வுகளை நோக்கும் போது ஜனாதிபதியின் சீன விஜயம் மிகவும் விசேடமானதாக அமைகிறது.

குறிப்பாக இந்த விஜயத்தை திட்டமிடுவதற்காக சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனை சம்மேளன தேசியக் குழுவின் உப தலைவர் கின் பொயோங் தலைமையிலான உயர் அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு வந்திருந்தது.

இந்திய விஜயத்தை நிறைவு செய்து கடந்த 17ஆம் திகதி நாடு திரும்பிய ஜனாதிபதி அநுரவை, மறுநாள் காலை (18ஆம் திகதி) சீனப் பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் வகையில், சீன விஜயத்தின் போது முன்வைக்க விரும்பும் எந்தவொரு புதிய திட்டங்களையும் நடைமுறைப்படுத்த சீனா அரசு தயாராக இருப்பதான செய்தி இதன் போது தெரிவிக்கப்பட்டது.

இதுவரை எந்தவொரு ஜனாதிபதிக்கும் கிடைக்காத தனித்துவமான தீர்மானத்தை சீனா முன்வைத்துள்ள நிலையில், சீன விஜயத்தின்போது முன்வைக்க உத்தேசிக்கப்படுகின்ற புதிய திட்டங்கள் குறித்து கடந்த சில நாட்களாக அரசாங்கத்துக்குள் விசேட கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், சீன விஜயத்தின் போது, தற்போது தடைப்பட்டுள்ள மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் கடவத்தை மற்றும் மீரிகம பகுதிகளை மீள ஆரம்பிப்பது தொடர்பிலும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. எவ்வாறாயினும், இம்முறை ஜனாதிபதியின் சீன விஜயத்தின்போது சீன அரசாங்கத்துக்கு விசேட அறிவிப்பொன்றை வெளியிட ஜனாதிபதி தயாராகி வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

அத்துடன் சீன - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம், துறைமுக நகர் முதலீடுகள், ஹம்பாந்தோட்டையில் உத்தேசிக்கப்படுகின்ற எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் சீன கப்பல் விஜயங்கள் உட்பட பல்வேறு இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பரந்தளவில் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சட்டங்களின் ஊடாகவும் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது! அரசியலமைப்பு ஊடாக தமிழர்களின் உரிமைகள் பாதுகாப்பட வேண்டும்



தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன். ஏனெனில் சட்டங்களின் ஊடாகவும் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதென ஸ்ரீலங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான பணிகளை துரிதப்படுத்துவதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. பல தசாப்தகாலமாக புதிய அரசியலமைப்பு உருவாக்கம் பற்றி பேசப்படுகிறது. இருப்பினும் எந்த அரசாங்கங்களும் புதிய அரசியலமைப்பினை உருவாக்கவில்லை. முதலாளித்துவ தரப்பினர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு விரும்பவில்லை என்பது தெளிவாக தெரிகிறது.

யுத்தம் முடிவடைந்தவுடன் அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்குவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசத்துக்கு வாக்குறுதியளித்தார். யுத்த வெற்றியை 2010 ஆம் ஆண்டு தேர்தலின் வெற்றிக்காக பயன்படுத்தினாரே தவிர நாட்டில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பயன்படுத்தவில்லை.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் புதிய அரசியலமைப்பினை உருவாக்கி இந்த நாட்டின் இன ஐக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று மஹிந்த ராஜபக்ஷ நினைத்திருந்தால் 2010 ஆம் ஆண்டு காலப் பகுதியிலேயே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டிருக்கும். ஒரு தரப்பினரது தவறான ஆலோசனைகளால் புதிய அரசியலமைப்பு குறித்து அவர் அக்கறை கொள்ளவில்லை.

2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்காக நடவடிக்கைகளை முன்னெடுத்தது. இருப்பினும் அப்போதைய எதிர்க்கட்சியாக இருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அதற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி இனவாத அடிப்படையில் செயற்பட்டது.

அதனைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த கோட்டபய ராஜபக்ஷ புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து பேச்சளவில் கூட கவனம் செலுத்தவில்லை. தமிழர்களுக்கு எதிராக குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் உரிமைகளை பறிக்கும் வகையில் செயற்பட்டார்.

இவ்வாறான இனவாத செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த அரசாங்கத்தில் இருந்து ஓரங்கட்டப்பட்டேன். 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி நாட்டு மக்கள் மத்தியில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தியது.

இடைக்கால ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க ஒரு தடவை புதிய அரசியலமைப்பு உருவாக்கம் குறித்து கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அப்போது நானும் சென்றிருந்தேன். புதிய அரசியலமைப்பு ஊடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும், தமிழர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டார். அப்போது சமஷ்டியாட்சி முறைமை தொடர்பில் கேள்வியெழுப்பிய போது சமஷ்டியாட்சி முறைமையை தான் எதிர்ப்பதாக குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பாரம்பரியமான அரசியல் முறைமைக்கு முடிவுக் கட்டியுள்ளது. புதிய அரசியலமைப்பினை உருவாக்குவதாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்துள்ளார். நாட்டு மக்களின் அரசியல் சிந்தனை மாற்றமடைந்துள்ளது. ஆகவே புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு நாட்டு மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள்.

தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன். ஏனெனில் சட்டங்களின் ஊடாகவும் தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. ஆகவே கடந்த கால தவறுகள் புதிய அரசியலமைப்பின் ஊடாக திருத்தியமைக்கப்பட வேண்டும் .அப்போது தான் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய முடியும் என்றார்.

எதிர் பாருங்கள்! காத்திருங்கள்!
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
32வது ஆண்டு விழா
23 மார்ச் 2025 ஞாயிற்றுக்கிழமை
சங்கீத சங்கமம் 2025
தொடர்புகளுக்கு:- 416 841 9600

# கப்பம் கேட்டதாகக் கூறி தேசிய மக்கள் சக்தி எம்.பி.க்கள் மீது தாக்குதல்!





பிங்கிரியவில் உள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றை பார்வையிடச் சென்ற தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரை சுற்றி வளைத்த மக்கள் குழுவொன்று அவ்விருவர் மீதும் தாக்குதல் நடத்தியதால் அப்பகுதியில், 30 டிசம்பர் 2024 திங்கட்கிழமை பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பஸ்நாயக்க மற்றும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் கிஹான் ஆகியோர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ள அதேவேளை மேலும் எட்டு பேரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் இடம் பெறுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் ஆடைதொழிற்சாலைக்கு விஜயம் மேற் கொண்ட வேளை இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கப்பம்பெற முயன்றனர் என குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன.

ஆடைதொழிற்சாலையின் வாயிலில் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் இடம்பெறுவதையும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிரட்டி பணம் பெற்றனர் என ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சாட்டுவதையும் காண்பிக்கும் வீடியோவை ஐக்கிய மக்கள் சக்தி வெளியிட்டுள்ளது.

முன்னரே திட்டமிட்டிருந்தபடி கலந்துரையாடல் ஒன்றிற்காகவே அங்கு சென்றதாக தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேசிறி பசநாயக்க தாங்கள் அங்கிருந்து வெளியேறிக் கொண்டிருந்த வேளை குழுவொன்று தவறான விதத்தில் நடந்து கொண்டது என தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனத்தை குழுவொன்று மறித்துக்கொண்டு நிற்பதை வீடியோவில் காணமுடிந்துள்ளது.

ஆடைதொழிற்சாலையின் வாகனப் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய மக்கள் சக்தியுடன் தொடர்புடைய நபர்கள் ஏற்கனவே இயங்கிக் கொண்டுள்ள குழுவை அகற்றி விட்டு போக்குவரத்தை முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டில்கொண்டு வர முயல்கின்றனர் என ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

# தேசியத் தலைவரால் மதிப்பளிக்கப்பட்ட ஈழத்தின் மூத்த படைப்பாளி யோகேந்திரநாதன் காலமானார்



ஈழத்தின் மூத்த படைப்பாளியும் ஊடகவியலாளருமான நா.யோகேந்திரநாதன் (வயது 80) 29 டிசம்பர் 2024ஞாயிற்றுக்கிழமை காலமானார். தனது படைப்புகள் மூலம் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வலுச் சேர்ந்த அவர், தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களால் மதிப்பளிக்கப்பட்டவர்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் கிளிநொச்சி - திருவையாறு தபாலகத்தின் உதவித் தபால் அதிபராகப் பணியாற்றியிருந்தார் 1960களில் இலக்கியத் துறைக்குள் பிரவேசித்தார். 1993இல் ஈழநாதம் நாளிதழ் வன்னிப் பிராந்தியத்துக்கான பதிப்பை தொடங்கிய போது அதன் ஆசிரியராக பணியாற்றினார். 1995 வரை வன்னி ஈழநாதத்தின் ஆசிரியராக அவர் தொடர்ந்து பங்காற்றினார். யாழ்ப்பாணத்தில் புதுவிதி வார இதழின் கௌரவ ஆசிரியராகவும் அவர் செயற்பட்டிருந்தார். மேலும் கண்ணீர் மழலைகள், விடுதலை முழக்கம் உட்பட பல தொடர் நவீனங்களை எழுதிய அவர் பலநூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் படைத்துள்ளார். தவிர போர்க் காலத்தில் பல வீதி நாடகங்களையும் உருவாக்கியிருந்தார்.

சமூக ஒடுக்குமுறையை வெளிப்படுத்தும் விதமாக இடிபடும் இரும்புக் கோட்டைகள் என்ற நாவலையும் இவர் படைத்திருந்தார்.


போர் முடிவுக்கு வந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் வெளியான பல பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகளை சந்திரசேகர ஆசாத், யோகநாராயணன், விஷ்ணுபுத்திரன், அக்கினீஸ்வரன் என்ற புனை பெயர்களிலும் நா.யோகேந்திரநாதன் என்ற இயற்பெயரிலும் எழுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போரை ஆவணமாக்கும் பெரு முயற்சியில் அளப்பரிய பங்காற்றிய அவர் போராட்ட வரலாற்றை மையமாகக் கொண்டு நீந்திக் கடந்த நெருப்பாறு, (முள்ளிக்குளத்திலிருந்து கிளிநொச்சிவரை), நீந்திக் கடந்த நெருப்பாறு (கிளிநொச்சியிலிருந்து புதுமாத்தளன் வரை), மரண மழையில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவல்களைப் படைத்திருந்தார். கடும் சுகயீனத்தால் பாதிக்கப்பட் டிருந்த வேளையிலும் ஆனையிறவை விடுதலைப் புலிகள் வெற்றி கொண்ட வரலாற்றை வெளிப்படுத்தும் விதமாக 39 நாட்களில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவலை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

இடது சாரிக் கொள்கையை மாறாத பற்றுடன் தன் வாழ்நாள் முழுவதும் பின்பற்றிய அவர் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக அளப்பரிய பங்காற்றினார். இதனால் பல்வேறு இன்னல்களுக்கும் அவர் முகம் கொடுத்திருந்தார். சமூக ஒடுக்குமுறையை வெளிப்படுத்தும் விதமாக இடிபடும் இரும்புக் கோட்டைகள் என்ற நாவலையும் இவர் படைத்திருந்தார்.

போர்க்காலத்தின் பின்னர் இவர் எழுத்திய 3 நாவல்கள் தேசிய ரீதியில் விருதுகளை வென்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் இலங்கை வானொலியில் ஒலிப்பரப்பான காட்டு நிலா, என்ற வானொலி நாடகம் நூலாக வெளியாகியிருந்தது.

# Dr அர்ச்சுனா பற்றி கம்பவாருதி ஜெயராஜ்



கேள்வி: டாக்டர் அர்ச்சுனாவின் நடவடிக்கைகள் உங்களையும் கவர்கிறதா என்ன?

பதில்: நிச்சயமாக இல்லை! நம் ஊரில் சிலரைப் பற்றிச் சொல்லுகையில் 'அவர் கல்யாண வீட்டிற்குப் போனால் மாப்பிள்ளையாகவும், செத்தவீட்டிற்குப் போனால் பிரேதமாகவும் இருக்கத் தான் விரும்புவார்' என்பார்கள். இவரும் அப்படித் தான் இருப்பது போற் தோன்றுகிறது. எங்கு போனாலும் தன்னை முதன்மைப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு பிரச்சனைகள் செய்து வருகிறார்.

தனது அதிரடி நடவடிக்கைகளால், குறித்த சில நாட்களுக்குள் தன்னை வளர்த்துக் கொண்டு வெற்றி கண்ட இவர், இனியும் அப்படியே தனது பாதையைத் தொடரலாம் என நினைப்பதுபோற் தெரிகிறது. அப்படி நினைந்தால் அது பெருந் தவறான முடிவாக இருக்கும் என்பது நிச்சயம்.

அவருடைய செயற்பாடுகளில் நாகரீகம் இல்லை. எவரையுமே அவர் மதித்து நடப்பதாய்த் தெரியவில்லை. மற்றவர்களை இழிவு செய்வதன் மூலம் தன்னை அவர் உயர்த்திக் கொள்ள நினைக்கிறார். அளவுக்கு அதிகமான அவரது ஆளுமையை, அவரது குறையென்றே நினைக்கத் தோன்றுகிறது. கிடைத்திருக்கும் திடீர் வெற்றியால் சமநிலை கெட்டுப்போய் இருக்கிறார் அவர்.

பிறேக் இல்லாத வாகனத்தைப் போன்ற அவரது இந்த இயக்கம் ஆபத்தானது. பிறேக் இல்லாத வாகனம், முதலில் மற்றவர்களை இடித்துச் சிதைக்கும். முடிவில் எங்கேனும் போய் மோதித் தன்னையும் அது சிதைத்துக் கொள்ளும்.

அவர் கைதட்டல்களுக்காய் இயங்குவதை விட்டுவிட்டு, கண்ணியமானவராய்ப் பெயரெடுக்க வேண்டும். அது தான் அவருக்கும் நல்லது நம் இனத்துக்கும் நல்லது.

பெருக்கத்தில் வேண்டும் பணிதல் சிறிய சுருக்கத்து வேண்டும் உயர்வுஎன்ற வள்ளுவரின் குறளை அவருக்கு யாரேனும் நினைவுட்ட வேண்டும். சுருக்கத்திலேயே பணிவில்லாமல் இருந்த அவர், பெருக்கத்தில் தலைகால் புரியாமல் ஆட்டம் போடத் தொடங்கியிருக்கிறார். அது அவருக்கே ஆபத்தாய் முடிந்து விடுமோ எனப் பயமாய் இருக்கிறது.

அவரது இந்தச் செயற்பாடுகள், ஆழமில்லாத நம்மவர் பலருக்குப் பிடித்துப் போக, உள்ளூரிலும், வெளிநாடுகளிலுமாகப் பலர், ஊடகங்களினூடு வெகு உற்சாகமாக அவருக்கு 'வால்முறுக்கி' விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கூட்டம், ஒருவர் வெற்றி பெறும் வரை அவரைத் தூக்கிப் பிடித்து விட்டு, தோல்வியுற்றதும் 'தொப்' எனப் போட்டு விட்டுப் போய்க் கொண்டேயிருக்கும். அர்ச்சுனா இதனை உணர வேண்டும்.




# தமிழரசுக்கட்சியின் அரசியல் குழுவின் தலைவராக மாவை! பதில் தலைவராக சி.வி.கே. சிவஞானம்! பேச்சாளராக சுமந்திரன்!

தமிழரசு கட்சியின் அரசியல் குழு தலைவராக மாவை சேனாதிராஜாவும் எஞ்சிய காலங்களுக்கான பதில் தலைவராக சி.வி.கே.சிவஞானமும் செயற்படுவார்கள் என தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு தீர்மானித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அறிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியா இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் 28 டிசம்பர் 2024 நடைபெற்றது. இதன் போது கட்சியின் தலைமை தொடர்பான விடயம் வாதப்பிரதிவாதங்களுக்கு உட்படுத்தப்பட்டு அது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

அது தொடர்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் ராஜினாமா தொடர்பாக வாக்கெடுப்பு நடத்துவதாக இருந்தது. இது தொடர்பாக பல வாதப்பிரதிவாதங்கள் இருந்த போதும் 18 உறுப்பினர்கள் கையொப்பமிடப்பட்ட ஆவணம் ஒன்று சபைக்கு கையளிக்கப்பட்டது.

திரு மாவை சேனாதிராஜா கட்சியின் நன்மை கருதி அவரது நற்பெயருக்கு களங்கம் இல்லாமல் தன்னுடைய ராஜினாவை உறுதிப்படுத்த வேண்டும் என்று அதில் அவர்கள் கேட்டிருந்தார்கள். அதற்கு எதிரான கருத்துக்களும் இருந்தது. இறுதியில் கட்சி ஏகமனதாக ஒரு தீர்மானத்தை





எடுத்திருக்கிறது. மாவை சேனாதிராஜா கட்சியினுடைய அரசியல் குழுவின் தலைவராக தொடர்ந்து செயற்படுவார்.

கட்சியின் தலைவர் ராஜினாமா செய்தால் இன்னொருவர் நியமிக்கப் பட வேண்டும் என்று எமது யாப்பிலும் சொல்லப்பட்டுள்ளது. அந்த வகையில் எஞ்சிய காலத்துக்கு பதில் தலைவராக கட்சியினுடைய சிரேஸ்ட உபதலைவர் சி.வி.கே. சிவஞானம் செயற்படுவார் என்று ஏகமனதாக வாக்கெடுப்பு இல்லாமல் பிரிவினை இல்லாமல் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே கட்சித் தலைவர் பதவியை சிவஞானம் வகிப்பார். அரசியல் குழு என்பது குழுவாக எடுக்கப்படும் தீர்மானங்களை மையப்படுத்தி, மத்திய செயற்குழு சந்திக்க முடியாத தருணங்களில் அரசியல் குழு கூடுவது வழக்கமாக இருக்கிறது. பல முக்கிய விடயங்களை அரசியல் குழுவே எடுத்திருக்கிறது. எனவே முன்னைய காலத்தில் மாவை சேனாதிராஜா கட்சித் தலைமை பொறுப்பை எடுத்த போது சம்பந்தன் அவர்களை அரசியல் குழுவின் தலைவராக நியமித்திருந்தோம். அதன் அடிப்படையிலே தான் இப்போது மாவை சேனாதிராஜா அந்த பதவியினை வகிப்பார் என்ற தீர்மானம் எடுத்துள்ளோம்.

இதேவேளை கட்சி தொடர்பாக யாழில் தொடரப்பட்ட வழக்கில் இது வரை கட்டளைகள் எதும் வழங்கப்படவில்லை. எனவே அது குறித்து கருத்து தெரிவிப்பதற்கு இல்லை என்றார்.

இது இவ்வாறிருக்க இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஊடகப் பேச்சாளராக தொடர்ந்து எம்.ஏ. சுமந்திரன் செயற்படுவார் என கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்ட சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார். தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் முடிவடைந்ததன் பின்னர் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்தவர்,

பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்ற குழு பேச்சாளராக ஸ்ரீநேசனை நியமித்துள்ளமையினால் அவர் பாராளுமன்ற விடயங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிப்பார். எனினும் தமிழ் அரசு கட்சியின் ஊடகப் பேச்சாளராக தொடர்ந்து எம்.ஏ.சுமந்திரன் செயற்படுவார் என்றும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை பதில் தலைவரென மற்றும் புதிய தலைவர் என கூறினாலும் சி.வி.கே சிவஞானமே தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தை மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தலைவராக அவர் தெரிவு செய்யப்பட்டமை குழப்பகரமான செயற்பாடு அல்ல இது குழப்பத்தை தவிர்த்து முன்னெடுக்கப்பட்ட செயற்பாடு.

இதனுடன், கட்சி யாப்பை மீறி கட்சிக்கு எதிராக செயற்பட்டவர்களை நீக்குவதற்கு கட்சியில் இடம் இருக்கின்ற நிலையில் ஜனாதிபதி தேர்தல் காலத்தில் கட்சிக்கு முரணாக செயற்பட்ட அரியநேத்திரன், கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இதனை ஒரு குழப்படிமன யாரும் கூற முடியாது.(20ம்பக்கம் பார்க்க)

# நினைவழியா நினைவுகளுடன் பிருதிவிராஜ் சிவசுப்பிரமணியம்

அன்பு மகனும் சகோதரனும், மாமாவும், அன்பான நண்பருமான ராஜி என்று அன்புடன் அழைக்கப்படும் பிருதிவிராஜ் சிவசுப்ரமணியம் அவர்களின் மறைவை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம், அதே போல் எங்கள் சமூகத்தின் அர்ப்பணிப்புள்ள வழக்கறிஞர் மற்றும் தூணாகத் திகழ்ந்தார். ராஜி உண்மையிலேயே குறிப்பிடத்தக்க தனி மனிதராக இருந்தார்,

மற்றவர்களுக்கு உதவுவதில் உள்ள அவரது ஆர்வம் மற்றும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சமூகத்திற்கான அவரது குறிப்பிடத்தக்க அர்ப்பணிப்பு ஆகியவற்றால் அவரது வாழ்க்கை வரையறுக்கப்பட்டது.

ராஜி ஒரு கவர்ச்சியான மற்றும் இரக்கமுள்ள தலைவராக இருந்தார், அரசியலில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் மற்றும் அவரது சமூகத்திற்காக வாதிடுவதில் உறுதியாக இருந்தார். நீதி மற்றும் சமத்துவத்திற்கான அவரது அர்ப்பணிப்பு அவர் சந்தித்த அனைவரிடமிருந்தும் ஆழ்ந்த மரியாதையையும் பாராட்டையும் பெற்றது. தனது சமூகத்தைச் சுற்றி அர்த்தமுள்ள மாற்றத்தை உருவாக்க ராஜியின் முயற்சிகள் எண்ணற்ற உயிர்களைத் தொட்டன. நீதிக்காக வேலை செய்தாலும், முக்கிய காரணங்களை முன் வைத்தாலும், அல்லது தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு ஆதரவையும் ஊக்கத்தையும் வழங்கினாலும், ராஜி தான் செய்த அனைத்தையும் எல்லையற்ற ஆர்வத்துடனும் நேர்மையுடனும் அணுகினார். அவரது சேவைச் செயல்களின் மூலம், அவர் உண்மையான தொடர்புகளை வளர்த்து அவர் ஆழமாக நேசித்த மதிப்புகளை நிலை நிறுத்தி, நமது சமூகத்தில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தினார்.

*Raji was a wonderful man, and I am so sorry we have lost him. When I ran to succeed Bill Graham as the Member of Parliament for Toronto Centre he became a great supporter to me, Arlene, and the family. I deeply appreciate his help and his friendship. He was a pillar of support in my 3 elections and I truly valued his advice, his passion, but above all his deep friendship. We discussed often the plight of the Tamil people in Sri Lanka, he had a wonderful kindness about him. He struggled recently with his health but that did not stop him from helping just family and friends. My best wishes and much love to his family.*

**- Bob Rae**



அவரது பொது பங்களிப்புகளுக்கு மேலே ராஜி மிகவும் அன்பான குடும்ப உறுப்பினராக இருந்தார், அவர் ஒரு அன்பான மற்றும் ஆதரவான மகனாக அவரது பாத்திரத்தை போற்றினார். அவர் பலருக்கு வழிகாட்டியாக இருந்தார், எப்போதும் ஞான வார்த்தைகள் மற்றும் உதவிக்கரம் கொண்டு தயாராக இருந்தார். அவரைச் சுற்றியுள்ளவர்களை ஊக்குவிக்கவும், இணைக்கவும், மேம்படுத்தவும் அவரது திறன் உண்மையிலேயே பாராட்டப்பட்டது.

ஒவ்வொரு புகைப்படமும் ஒரு கதையைச் சொல்கிறது, மேலும் ராஜியின் லென்ஸ் தனிப்பட்ட நினைவுகளை மட்டும் படம் பிடிக்கும் வழியைக் கொண்டிருந்தது, ஆனால் அவர் தனது சமூகத்தின் மீதான தனது எப்பொழுதும் ஆர்வத்துடன் ஆழமாக இணைக்கப்பட்ட தருணங்களைக் கொண்டுள்ளது.

ராஜி, ஒரு புகைப்படக் கலைஞராக, சாதாரண தருணங்களை குறிப்பிடத்தக்க நினைவுகளாக மாற்றினார். அவரது மறைவில், அவரது புகைப்படங்கள் அவரது வாழ்க்கையின் நிலையான சான்றாக மாறி, நம் வாழ்நாள் முழுவதும் நம் இதயங்களிலும், மனதிலும் மற்றும் ஆன்மாக்களிலும் நாம் சுமந்து செல்லும் அர்த்தமுள்ள நினைவுகளை அழியாது.

ராஜியின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் அவரை அறிந்து ஆசி பெற்ற அனைவருக்கும் எங்களது இதயப்பூர்வமான இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரது நினைவை நம் சொந்த வாழ்வில் போற்றும் போது அவர் வைத்திருந்த மதிப்புகள் நமக்கு வழிகாட்டும். ராஜியை ஆழ்ந்து இழக்க நேரிடும், ஆனால் அவரது மரபு நமக்குள் என்றென்றும் ஊக்கமளித்து வாழும். அவரது ஆன்மா சாந்தியடையட்டும்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

# இந்திய - இலங்கை ஒப்பந்த அமுலாக்கல்:- "பந்து" நெடுநாளாக இலங்கைத் தமிழர் கைகளில் தான்

– த.கோபாலகிருஷ்ணன் –

இலங்கை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அண்மையில் (16.12.2024) இந்திய விஜயம் மேற்கொண்ட நேரம் பார்த்து அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) யின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கையின் ஒற்றை ஆட்சி அரசியல் அமைப்பை நீக்கி சமஷ்டி அரசியலமைப்பை உருவாக்குவதற்கு இலங்கை அரசை வற்புறுத்துமாறு கோரிக்கையொன்றை வைத்துக் கடிதம் எழுதினார்.



இலங்கை ஜனாதிபதி தனது இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் 'வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் 75 வருடங்களாக எத்தகைய சலனமும் இன்றி சமஷ்டித் தீர்வையே கோருகிறார்கள். எனவே அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது கூறிய புதிய அரசியலமைப்பைக் கொண்டு வர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறியுள்ளார்.



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 'புதிய அரசியல் சாசனம் ஒன்றில் நாங்கள் கேட்கின்ற சமஷ்டி கோரிக்கை உள்வாங்கப்படும் வரையில் 13 ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதை அனைத்துத் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்த வேண்டும்' என்று தெரிவித்துள்ளார்.

இந்த மூன்று அறிவிப்புகளுமே இலங்கைத் தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற அல்லது அவர்களுக்குப் பூச்சுற்றுகின்ற ஏட்டுச் சுரக்காய் அரசியல் ஆகும். தம்முடைய தமது கட்சியின் இருப்பை விலாசப்படுத்துகின்ற



விளம்பரப்படுத்துகின்ற வழமையான அரசியல் சித்து விளையாட்டுக்கள்தான் இவை. நாங்கள் சும்மா இருக்கவில்லை, இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக எப்பொழுதும் விழிப்பாகவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறோமென்று காட்டுவதற்கான போலி எத்தனம்.

இலங்கை அரச தலைவர்கள் இந்தியாவுக்குப் பயணங்கள் மேற்கொள்ளும் போதும் இந்திய இராஜதந்திரிகள் உயர்மட்டத் தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பங்களிலும் இவ்வாறான அரசியல் அறிவிப்புக்களைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று தம்மைக் குறி சுட்டுக் கொண்



டுள்ள இக்கட்சிகள் அள்ளி இறைத்து விடுவது வழமையான ஒரு சம்பிரதாயமாகவே நடைபெற்று வருகின்றன.

இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் எழுதப்பட்ட 1987ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலான கடந்த 37 வருடங்களாகத் தமிழ் அரசியல் தலைவர்களைப் பொறுத்தவரை தோழர் பத்மநாபா தலைமையிலான முன்னாள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைத் தவிர தனிநபராக நோக்கும்போது முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கத்தைத் தவிர வேறு எந்த தமிழ் அரசியல் கட்சிகளோ அல்லது தனிநபர் அரசியல் தலைவர்களோ இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் விளைவான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் செய்வதில் ஈடுபாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் உழைக்கவேயில்லை.

மாறாகத் தத்தம் சுயநலத் தேர்தல் அரசியல் தேவைகளுக்காக, 13 ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படுவதை அப்போதைய இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுடன் இணைந்து குழப்பிய இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தை அமுல் செய்யவென இலங்கையின் வடகிழக்கு மாகாணங்களில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டவரும் பிரேமதாசவுக்கு முந்திய இலங்கை ஜனாதிபதியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஒப்புதலுடன் பிரசன்னமாயிருந்த இந்திய அமைதி காக்கும் படையினர் மீது போர் தொடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குப் பக்கப்பாட்டு பாடிய இவர்கள் தான் இன்று 13 ஆவது திருத்தம் பற்றி உதட்டளவில் பிரஸ்தாபிக்கின்றனர். இது கடைந்தெடுத்த அரசியல் ஆசாட பூதித்தனம் ஆகும்.


மேலும், சமஸ்டி பற்றி வெறுமனே உச்சரிப்பது தற்போதைய தென்னிலங்கை இந்து சமுத்திரப் பிராந்திய பூகோள அரசியல் நீரோட்டத்தின் தட்பவெட்ப நிலைகளைப் புரிந்து கொள்ளாத அல்லது புரிந்து கொள்ள மறுக்கின்ற அரசியல் மதியீனம் ஆகும்.

தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே நிலவும் இந்த நிலைமை அரசியல் யதார்த்தபூர்வமற்றதுமாகும். இது கோவணம் உரியப்பட்டுக் கொண்டிருக்கும் போது பட்டுவேட்டி பற்றிக் கதைப்பது போலாகும்.

இலங்கைத் தமிழர்களுடைய அரசியல் பொதுவெளியில் இன்று ஏதோ ஒரு வழியில் வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் தமது கொள்கை மற்றும் கருத்து முரண்பாடுகளையும் கடந்த காலப் பகைமையுணர்வுகளையும் ஒருபுறம் ஒதுக்கிவைத்து விட்டு 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்படுவதை மட்டுமே ஒற்றைக் கோரிக்கையாக முன்வைத்து ஒரே புள்ளியில் இணைவது ஒன்று தான் இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவதற்கான ஒரே நடைமுறை மார்க்கமாகும்.

இதனையே இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் இன்னொரு கைச்சாத்தியான இந்தியாவும் நெடுங்காலமாக எதிர்பார்க்கிறது. பந்து நெடுங்காலமாக இலங்கைத் தமிழர்களின் கைகளிலேயே விடப்பட்டுள்ளது.


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. "தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

06 டிசம்பர் 2024 - 20 டிசம்பர் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 32வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சுப்பர் பொன்னுத்துரை
### திருமதி நாகமுத்து பொன்னுத்துரை

நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை இணையர்களது 32வது ஆண்டு நினைவு நாள் 01 ஜனவரி 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சுப்பர் பொன்னுத்துரை திருமதி நாகமுத்து பொன்னுத்துரை ஆகியோரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 27 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகநாதன் பொன்னுத்துரை

யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களது ஒன்பதாவது ஆன்டு நினைவு நாள் 28 டிசம்பர் 2024 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு சண்முகநாதன் பொன்னுத்துரை அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தங்கம்மா சதாசிவம்

புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களது ஆறாவது ஆண்டு நாள் நினைவு நாள் 09 ஜனவரி 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தங்கம்மா சதாசிவம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 37வது ஆண்டு நினைவஞ்சலிகள்




### திரு சரவணமுத்து நமசிவாயம்

பண்ணாகம் தெற்கு சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களான திரு சரவணமுத்து நமசிவாயம் அவர்களதும் திரு சரவணமுத்து அருளம்பலம் அவர்களதும் 37வது ஆண்டு நினைவு நாள் 26 டிசம்பர் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது மகன் ரமணன் நமசிவாயம் இருவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு ச.நமசிவாயம், திரு ச.அருளம்பலம் ஆகியோரை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன்இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி வசந்தா தவரத்தினம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பிரம்டன் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களது நான்காவது ஆண்டு நாள் நினைவு நாள் 09 ஜனவரி 2025 வியாழக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி வசந்தா தவரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின் றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல்
### திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல்

கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 8வது ஆண்டு நினைவு நாளையொட்டியும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 6வேது ஆண்டு நினைவு நாளையொட்டியும் 01 ஜனவரி 2025 புதன்கிழமை அன்னாரது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். இணையர்கள் இருவரையும் நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினர் உறவினர்கள் ஆகியோருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



23 டிசம்பர் 2024 திங்கட்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



24 டிசம்பர் 2024 செவ்வாய்க்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்தவர்களான திருமதி சிவமணி பாலசிங்கம் அவர்களது 1வது ஆண்டு நினைவு நாளும் திரு செல்லப்பா பாலசிங்கம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளுமாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 டிசம்பர் 2024 தன்கிழமை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி றெஜினா எலிசபெத் சாமுவேல் அவர்களது 6வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளில் அன்னாரது கணவர் திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களையும் நினைவு கூர்ந்து அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



25 டிசம்பர் 2024 புதன்கிழமை நத்தார் தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



25 டிசம்பர் 2024 புதன்கிழமை நத்தார் தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



25 டிசம்பர் 2024 புதன்கிழமை நத்தார் தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



26 டிசம்பர் 2024 வியாழக்கிழமை பண்ணாகம் தெற்கு சுழிபுரத்தைச் சேர்ந்தவர்களாக திரு சரவணமுத்து நமசிவாயம் திரு சரவணமுத்து அருளம்பலம் ஆகியோரது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் திரு நமசிவாயம் அவர்களது மகன் திரு ரமணன் அவர்கள் அன்னார்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்.



27 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 டிசம்பர் 2024 சனிக்கிழமை யாழ்.நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு பொன்னுத்துரை சண்முகநாதன் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



28 டிசம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் ஞானகுமாரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் முகுந்தனின் 36வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் முகுந்தன் தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



28 டிசம்பர் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருதிருமதி சற்குணநாதன் சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வன் கிசோரின் 13து பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கிசோர் தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




25 டிசம்பர் 2024 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஆனந்தசேகரன் அமிர்தலிங்கம் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினத்திற்காக திரு ஆனந்தசேகரன் அமிர்தலிங்கம் அவர்கள் 29 டிசம்பர் 2024 ஞாயிற்றுக் கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழந்தார்.



30 டிசம்பர் 2024 திங்கட்கிழமை தாவடி வடக்கு கொக்குவிலைச் சேர்ந்தவர்களான திரு செல்லையா இராஜதுரை திருமதி நாகரெத்தினம் இராஜதுரை ஆகியோரது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை கொழும்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு டானியல் எபநேசர் சிட்னி சாமுவேல் அவர்களது 8வது ஆண்டு நினைவாக அன்னாரது குடும்பத்தினர் புத்தாண்டு தினத்தன்று அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை நயினாதீவு 3ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்களான திரு திருமதி சுப்பர் பொன்னுத்துரை அவர்களதும் அவரது துணைவியார் திருமதி நாகமுத்து பொன்னுத்துரை அவர்களதும் 32வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.

# சாதனையாளர்களைக் கௌரவித்து சிறப்பாக நடைபெற்ற கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கத்தின் 12வது ஆண்டு விழா

இலங்கை முன்னாள் வர்த்தகர் சங்கம் கனடாவின் 12வது ஆண்டு விழா கடந்த 29 டிசம்பர் 2024 ஞாயிற்றுக் கிழமை கிழமை சங்கத்தின் தலைவரும் சமூக சமய பொதுநல ஆர்வலரும் ஆதரவாளருமாக திரு சோம.சச்சிதானந்தன் அவர்கள் தலைமையில் ஸ்காபரோவில் நடை பெற்றது. பிரதம விருந்தினராக பிரபல சட்டத்தரணியும் சமூகத் தலைவருமான சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளுக்குமேலாக இசைத்துறைக்குச் செய்த பங்களிப்பையும் கனடிய மண்ணில் ஒலி ஒளி ஊடகத்துறையில் சிறப்பாக பங்களிப்பாற்றிய திரு கோணேஸ் அவர்கள் கௌரவிக்கப்பட்டார். இவரைப் பற்றி மூத்த ஒலி ஒளி அறிப்பாளர் திரு பி.விக்னேஸ்வரன் அவர்கள் அறிமுகவுரை நிகழ்த்தினார். அவர் தனதுரையில் திரு கோணேஸ் அவர்கள் தாயகத்திலும் கனடாவிலும் இசைத்துறையிலும் ஒலி ஒளி ஊடகத்துறையிலும் எவ்வளவு நேர்த்தியாகக் பணியாற்றினார் என்பதை தனது அனுபவப் பார்வை ஊடக எடுத்துரைத்தார்.

சமூக சேவைக்கான விருதினை முனைவர் பார்வதி கந்தசாமி அவர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இலங்கையிலும் கனடாவிலும் வர்த்தகத் துறையில் சாதனை படைத்த வர்த்தகப் பிரமுகர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

உறவு தேசம் ஊர் கிராம அபிவிருத்தி என்று பல்வேறு பொதுப் பணிகளில் நேர காலம் கருதாமல் உழைத்து வருபவரும் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் அங்கத்தவருமான திரு மதியழகன் (எம்.ஜி.ஆர்) அவர்களுக்கும் திரு சபா வரதராஜா அவர்களுக்கும் சமூக நல தன்னார்வத் தொண்டருக்கான விருது வழங்கப் பட்டது.

கனடாவில் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தாயகம், தமிழ்த்தேசியம், விடுதலை என்ற இலட்சியத்தோடு பயணிக்கும் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் குலசிங்கம் பரமேஷ்வரன் அவர்களது சமூக சேவைக்கு மதிப் பளித்துக் கௌரவிக்கப்பட்டார். இவரை திரு கிருஷ்ணகோபால் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார். அதே போன்று உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு லோகேந்திரலிங்கம் அவர்களது ஊடகத்துறை பணியைப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார். இவரை திரு சோதி செல்வா அவர்கள் பன்மைத் தன்மை கொண்ட ஊடகவியலாளர் என்ற புகழாரத்தோடு அறிமுகம் செய்து வைத்தார். கனடாவின் முன்னணி இசைக்குழுவான அரவிந்தனின் மெகாரியுனஸ் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் பல்வேறு சங்கங்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்து வருவதைப் பலரும் அறிவார்கள். பல ஊர் அமைப்புக்கள், சங்கங்களில் பதவிகளில் இருப்பவர்கள் தமது பதவிக் காலம் முடிய ஒதுங்கிக் கொள்வார்கள் ஆனால் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தினர் இதனை மாற்றி அமைத்துள்ளார்கள்.

கடந்த காலங்களில் சங்கத்தின் முக்கிய பொறுப்புக்களில் இருந்த திரு கிருஷ்ணகோபால் அவர்கள் திரு கேதா நடராஜா அவர்கள் திரு அருண் குலசிங்கம் அவர்கள் திரு கல்யாண சுந்தரம் அவர்கள் திரு ஜெயம் கனக சபை அவர்கள் திரு கருணாகரன் (கருணா) அவர்கள் இவ்வாண்டின் செயற் பாட்டு நிர்வாகிகளுடன் இணைந்து முழு மூச்சாகப் பணியாற்றினார்கள் என்று விழா மண்டபத்தில் வர்த்தகர்கள் ஆர்வலர்கள் இவர்களைப் பாராட்டியதைக் காணக் கூடியதாக இருந்தது.

கனடிய தமிழ் சமூக மையத்தின் கட்டிட நிதிக்காக 10,000.00 டொலர்கள் திரு சாந்தா பஞ்சலிங்கம் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

Scarborough Convention Centre இல் இந்நிகழ்வு நடைபெற்றது. மண்டப ஒழுங்கமைப்பு மேடை அமைப்பு அமைப்புக்கள் சிறப்பாக இருந்தது. மிக முக்கியமான இராப்போசன விருந்து உணவுகள் மிக மிக சுவையாகவும் சூடாகவும் இருந்தது. விழாவுக்கு




வந்தோரின் மனமும் வயிறும் மனமார மகிழ்ந்திருந்தது.

புகைப்பட உதவி ஜயா 4 யூ











# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி றொபின் கிரிஜா இணையர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவபாலன் லலிதகுமாரி செல்வி சந்தியா சிவபாலன் ஆகியோர் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



01 ஜனவரி 2025 புதன்கிழமை புத்தாண்டு தினத்தை முன்னிட்டு கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிங்கநாயகம் சின்னப்பு குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



27 டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி இரத்தினசோதி அரியராஜசிங்கம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! ஜனவரி மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!


Celebrating 32 years of excellence, Eelanadu, a Tamil community newspaper in Canada

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 32வது ஆண்டு விழா

Kalaimamni, **Dr. Nithyasree Mahadevan** presents

**Sangeetha Sangamam 2025 - Carnatic Musical Concert**

கலைமாமணி **டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன்** வழங்கும்

**சங்கீத சங்கமம் 2025**





சிறப்புரை

**வேர்களைத் தேடுங்கள்**

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவர்கள்

**Sunday, March 23, 2025 @ 5:30pm**

**The Armenian Community Centre**

50 Hallcrown Place, Toronto, ON

தொடர்புகளுக்கு

ஈழநாடு பரமேஸ்

416-841-9600

eelanadu1993@gmail.com

# Buying Home / Selling / Investing

## Knowledge . Experience . Dedication



# இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

மற்றும்

# தை பொங்கல் வாழ்த்துக்கள்

உங்கள் ஆதரவுக்கு நன்றி!

HOMELIFE HIGHER STANDARDS

**Indra** Michael Xavier
Sales Representative
**647 995 6829**
*indra.m.xavier@gmail.com*

**HomeLife/ Future**
Realty Inc., Brokerage*
205-7 Eastvale Dr. Markham ON, L3S 4N8
**Office: 905-201-9977** Fax: 905 201 9229
*Independenlty Owned and Operated



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# 2024:- வென்றவை தோற்றவை

இந்த ஆண்டின் தொடக்கத்திலும் முடிவிலும் நடந்த இரண்டு தேர்தல்கள் தமிழ் அரசியலின் சீரழிவை வெளியே கொண்டு வந்தன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழரசுக் கட்சிக்குள் நடந்த தேர்தலானது தமிழ் அரசியலில் சீரழிவை குறிப்பாகத் தமிழரசுக் கட்சியின் சீரழிவை வெளியே கொண்டு வந்தது.

இந்த ஆண்டின் இறுதியில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் தமிழ்த் தேசிய அரசியலின் இயலாமையை வெளியே கொண்டு வந்தது. நாடாளுமன்றத்தில், தமிழ்த் தேசியத் தரப்பின் பிரதிநிதித்துவம் மேலும் குறைந்திருக்கிறது.

இந்த ஆண்டின் தொடக்கமே தேர்தல் தான். கட்சித் தலைவரை தேர்தல் மூலம் தெரிந்தெடுப்பது கட்சி ஜனநாயகத்தைச் செழிப்பாக்கும். எனினும் தமிழரசுக் கட்சி தன் தலைவரை தேர்தல்கள் மூலம் தெரிந்தெடுக்கும் ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருக்கவில்லை. அந்த அடிப்படையில் சுமந்திரன் தான் கட்சியின் தலைவராக வந்திருக்க வேண்டும். ஏனென்றால் சம்பந்தர் அவரைத் தான் தன்னுடைய வாரிசாக வளர்த்தார். ஆனால் சுமந்திரன் ஜனநாயக வழிமுறை மூலம் தன் பலத்தைக் காட்ட விரும்பினார். எனினும் அது அவருடைய பலவீனத்தைத் தான் காட்டியது. அவர் தோற்கடிக்கப்பட்டார். அதன் விளைவாக கட்சி இப்பொழுது நீதிமன்றத்தில் நிற்கின்றது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடந்த அந்த தேர்தல் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள பெரிய கட்சியின் உட்பகையை வெளியே கொண்டு வந்தது. தமிழரசுக் கட்சி எந்தளவுக்குத் தூர்ந்து போய் உள்ளது என்பதனை அது வெளிப்படுத்தியது.

அதேபோல இந்த ஆண்டின் இறுதியில் நடந்த நாடாளுமன்றத் தேர்தல், தமிழ்த் தேசிய அரசியல் எந்தளவுக்குத் தோற்றுக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டியது.

சுமந்திரன் தோற்கடிக்கப்பட்டதை டக்ளஸ், பிள்ளையான் அங்கஜன் போன்றவர்கள் தோற்கடிக்கப்பட்டதை தமிழரசு கட்சிக்கு அதிக ஆசனங்கள் கிடைத்ததை வெற்றியாகக் காட்டமுடியும். ஆனால் ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய அரசியலில் ஆசனங்கள் குறைந்து விட்டன. அது ஒப்பீட்டளவில் தோல்வி. தமிழ் மக்கள் நாடாளுமன்றத்தில் ஒரு தேசமாக, பலமாக இல்லை.

இப்பொழுது தொகுத்துப் பார்க்கலாம். ஆண்டின் தொடக்கத்தில் இருந்து முடிவு வரையிலும் தமிழ்த் தேசிய அரசியலின் சீரழிவை வெளிப்படுத்தும் இரண்டு தேர்தல் நடந்திருக்கின்றன. இந்த இரண்டு தேர்தல்களும் தமிழ் மக்கள் இன அழிப்புக்கு எதிராக நீதியை பெறத் தேவையான பலத்தை பெருக்கிக் கொள்ள முடியாதிருக்கிறார்கள் என்பதனை வெளியே கொண்டுவந்தன.

எனினும் இந்த இரண்டு தேர்தல்களுக்கும் இடையில் ஒரு தேர்தல் வந்தது. அது ஜனாதிபதித் தேர்தல்.அதில் ஒரு தமிழ் பொது வேட்பாளர் முன்னிறுத்தப்பட்டார். அவருக்கு கிடைத்த வாக்குகள் ஏறக்குறைய 2,26,000.அது ஒரு அடிப்படை வெற்றி. கட்சிகளைக் கடந்து தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்ட போகிறோம் என்று கூறி ஒரு மக்கள் அமைப்பு அந்தத் தேர்தலைக் கையாண்டது.

ஏழு கட்சிகளை வைத்து கட்சிகளைக் கடந்த ஒரு வாக்குத் திரட்டியை ஏற்படுத்தலாம் என்று அந்த அமைப்புத் திட்டமிட்டது. அதற்கென்று ஒரு பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. பொதுக் கட்டமைப்புக்குள் கட்சிகளும் மக்கள் அமைப்பின் பிரதிநிதிகளும் அடங்கியிருந்தனர்.

கட்சிகளைக கடந்து மக்களைத் திரட்டலாம் என்ற நம்பிக்கையை தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தின. இங்கு ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும்.தேர்தல் பரப்புரைக்காக பிரம்மாண்டமான கூட்டங்கள் ஒழுங்குபடுத்தப் பட்ட பொழுது, குடாநாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இருந்து மக்களைக் கொண்டு வரும் பேருந்துகளுக்கு சிறிய தொகைப் பணம் வழங்கப்பட்டது. எரிபொருட் செலவு, சாரதி மற்றும் வழி நடத்தினருக்கான சிற்றுண்டி,தேனீர் செலவுகள். இவ்வாறு வலிகாமம் பகுதியில் இருந்து மக்களைக் கொண்டு வந்த ஒரு பேருந்து உரிமையாளரிடம் செலவுப் பணத்தை கொடுத்த பொழுது, அவர் அதை வாங்க மறுத்து விட்டார்.

15 ஆண்டுகளாக கட்சிகளுக்குத் தான் ஆட்களை ஏற்றி இறக்குகிறேன். இது தான் முதல் தடவை இப்படி ஒரு கூட்டத்துக்கு ஆட்களைக் கொண்டு வருவது. வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களை இப்படி ஒன்றாக ஒரு கூட்டத்துக்கு அழைத்துக் கொண்டு வருவது என்பது புதியது. 2009க்கு முந்திய நினைவுகளை அது மீட்டியது. எனக்கு நீங்கள் விருப்பம் என்றால் எரி




பொருள் செலவு மட்டும் தாருங்கள்" என்று கேட்டார். கட்சி கடந்து தமிழ் மக்களைத் திரட்டும் போது மக்கள் மத்தியில் எவ்வாறு எழுச்சி ஏற்பட்டது என்பதனை காட்டும் ஒரு உதாரணம் அது. அது போலவே ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்தோடு மக்கள் அமைப்பாகிய தமிழ் மக்கள் பொதுச்சபை கிராமங்கள் தோறும் சிறிய மற்றும் பெரிய மக்கள் சந்திப்புகளை நடத்தியது. இந்த சந்திப்புகளில் 75 விகிதமானவற்றில் ஒரு விடயம் திரும்பத் திரும்ப மக்களால் கூறப்பட்டது. என்னவென்றால், கட்சிகளோடு வராதீர்கள், மக்கள் அமைப்பாக வாருங்கள், கட்சிகள் வேண்டாம் என்பதே அது.

ஆனால் மக்கள் அமைப்பு தேர்தலை நேரடியாகக் கையாள விரும்பவில்லை. அதற்குரிய கட்டமைப்புப் பலமும் இருக்கவில்லை. எனவே கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கியது. அந்தப் பொதுக் கட்டமைப்பு தமிழ்த் தேசிய வரலாற்றில் ஒரு புதிய அனுபவம்.கட்சிகளும் மக்கள் அமைப்பும் இணைந்து ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை எழுதிச் செயல்படுவது என்பது.

ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவையும் அவ்வாறான ஓர் அனுபவந் தான். ஆனால் அங்கே புரிந்துணர்வு உடன்படிக்கை எழுதப்படவில்லை. தமிழ் மக்கள் பேரவை ஓய்ந்தபின் கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் கழித்து தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு உருவாகியது. அது தேர்தலில் ஒரு ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி வெற்றியும் பெற்றது.கிழக்கிலிருந்து வந்த ஒரு வேட்பாளருக்கு வடக்கில் சுமார் ஒன்றரை லட்சம் மேற்பட்ட வாக்குகள் கிடைத்தன.

ஒரு பெரிய ஊடகத்தின் முதலாளி மக்கள் அமைப்பிடம் சொன்னார் கிழக்கில் இருந்து கொண்டு வரும் ஒரு வேட்பாளருக்கு வடக்கில் வாக்களிப்பார்களா? என்று. ஒரு பத்தாயிரம் வாக்குகள் கிடைக்குமா என்று கேட்டார். ஆனால் அவர் எதிர்பார்த்ததை விட 20 மடங்கு வாக்குகள் கிடைத்தன. தமிழ்ப் பொது வேட்பாளர் கடந்த 15 ஆண்டு கால தேர்தல் அரசியலில் தமிழ் மக்களுக்கு ஒரு புது அனுபவம். தமிழ்ப் பொது வேட்பாளரை இந்தியாவின் புரஜக்ட் என்று கூறி நிராகரித்த தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இப்பொழுது சிவில் சமூகங்கள் முன்கை எடுத்ததனால் உருவாகிய திரட்சி என்ற பொருள்பட அதை வியாக்கியானம் செய்கின்றது.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு கிடைத்த வாக்குகளை தேசியவாத வாக்குகள் என்று கஜேந்திரகுமார் கூறுகிறார். அது காலத்தால் பிந்திய ஞானம். கஜேந்திரக் குமாரை அந்த அணிக்குள் இணைப்பதற்கு தமிழ் மக்கள் பொதுச்சபை கடுமையாக உழைத்தது. ஆனால் கஜேந்திரன் ஒரு சந்திப்பின் போது சொன்னார் இந்த விடயத்தில் நீங்கள் வென்றால் நாங்கள் எங்களிடம் இப்பொழுது இருக்கும் இரண்டு ஆசனங்களையும் இழந்து விடுவோம் என்பது எங்களுக்கு தெரியும். அதைத் தெரிந்து கொண்டு தான் தாங்கள் பொது வேட்பாளரை எதிர்க்கிறோம். என்று.

சிறீதரன் சொன்னார் மக்களமைப்பு சுயேட்சையாக வேட்பாளர்களை இறக்கப் போவதாக எமது ஆதரவாளர்கள் கதைக்கிறார்கள் என்று. ஒரு மூத்த அரசியல்வாதி மற்றொரு மூத்த அரசியல்வாதி மற்றொரு கட்சியின் தலைவரிடம் கூறினாராம் இவங்கள் வெற்றி பெற்றால் நாங்கள் இல்லாமல் போய் விடுவோம் என்று.

சுமந்திரன் அதனை மூர்க்கமாக எதிர்த்தார். அதை ஒரு கேலிக் கூத்து என்று வர்ணித்தார். மக்கள் அமைப்பைக் கடுமையாக எச்சரித்தார். தமிழ்ப் பொது வேட்பாளருக்கு விழும் வாக்குகள் அனைத்தும் வீணாய் போகும் வாக்குகள் என்று எச்சரித்தார். அதனை அவர் சஜித்தின் கூட்டத்தில் பேசும் போது சொன்னார்.

தமிழ் ஊடகங்களிலும் ஒரு பகுதி தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக இருந்தது. ஊடகவியலாளர்களில் சிறு பகுதியினர் எதிராக இருந்தார்கள். ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளர் முகநூலில் எழுதினார் கட்டுரை எழுதுவது வேறு தேர்தலில் வேட்பாளர் நிறுத்தி வெல்வது வேறு இரண்டும் ஒன்று அல்ல என்று. தமிழ் மக்கள் பொதுச் சபையைச் சேர்ந்த கருத்துருவாக்கிகளை சில ஊடகவியலாளர்களும் சில யூடியூப் வெறுப்பர்க்களும் எதிரியை விடக் கேவலமாக சிறுமைப்படுத்தினார்கள்.

தமிழ்ப் பொது வேட்பாளரைக் கண்டு தமிழ் அரசியல்வாதிகளில் ஒரு பகுதியினர் பயந்தார்கள். பெரும்பாலான சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் பயந்தார்கள். அல்லது உஷார் அடைந்தார்கள். நாடு முழுவதும் மாற்றத்துக்காக நிற்கும் பொழுது நீங்கள் மட்டும் அதற்கு எதிராக போகப் போகிறீர்களா என்று அனுர கேட்டார்.தமிழ் பொது வேட்பாளரை உங்களால் நிறுத்த முடியாது. முடியுமானால் நிறுத்திக் காட்டுங்கள் என்று ரணில் விக்கிரமசிங்க விக்னேஸ்வரனிடம் சொன்னார். தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது பொதுவான பேரழிவு என்று சஜித் எச்சரித்தார்.

ஆனால் எல்லாவிதமான எதிர்ப்புகளையும் தாண்டி தமிழ்ப் பொது வேட்பாளர் வடக்கையும் கிழக்கையும் இணைத்தார். தமிழ் தேர்தல் வரலாற்றில் ஒரு தனி நபருக்கு கிடைத்த ஆகக்கூடிய வாக்குகளை அவர் வென்றார்.

**கட்டுரையாளர்:**
**யாழ்ப்பாணத்தில் இருந்து**
**- நிலாந்தன் -**



எனினும் பொது வேட்பாளருக்கு கிடைத்த அடிப்படை வெற்றியை கொண்டாட முடியவில்லை. தேர்தல் முடிந்த சில நாட்களில் அடுத்த தேர்தல் அறிவிக்கப்பட்டது. அடுத்த தேர்தலை கையாள்வதற்கு மக்கள் அமைப்பு தயாராக இருக்கவில்லை.

மக்கள் அமைப்புக்குள் இரு வேறு கருத்துக்கள் கிளம்பின. அதனால் மக்கள் அமைப்புக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டன.மக்கள் அமைப்பு தேர்தலைக் கையாளாத ஒரு பின்னணியில், வெற்றி பெற்ற சின்னத்தைத் தாங்கள் சுவிகரிப்பது என்று பொதுக் கட்டமைப்புக்கள் இருந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்தது. அது பொதுக் கட்டமைப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறானது.

அதன் விளைவாக கட்சிகளுக்கும் மக்கள் அமைப்புக்கும் இடையிலான புரிந்துணர்வு சோதனைக்கு உள்ளாகியது. சங்குச் சின்னத்துக்கு ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த வாக்குகள் நாடாளுமன்ற தேர்தலில் கிடைக்கவில்லை. ஒருவர் மட்டுமே வெற்றி பெற்றார். நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிணைக்கப்படாத கட்சிகள் மீண்டும் சிதறின. அதிகரித்த அளவில் சுயேச்சைகள் தோன்றின. தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்குத் தண்டனையாக அமைந்தன.

அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்கும் ஒரே அளவு ஆசனங்கள். தமிழ்த் தேசிய ஆசனங்களின் மொத்த தொகை மேலும் வீழ்ச்சியடைந்தது. ஆனால் தமிழரசுக் கட்சி தனிக் கட்சியாக அதிக ஆசனங்களைப் பெற்றது. அந்த வெற்றியைக் கொண்டாட முடியாது. ஏனென்றால் தேசியவாத அரசியல் என்பது ஒரு மக்களை தேசமாகத் திரட்டுவது. ஆகப் பெரிய திரளாகத் திரட்டுவது.

அவ்வாறு திரட்டப்படாத காரணத்தால் தான் இம்முறை தமிழ்த் தேசிய ஆசனங்களின் மொத்த தொகை குறைந்தது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதில் தமிழரசுக் கட்சியும் உட்பட எல்லாக் கட்சிகளும் தோல்வியடைந்து விட்டன.


எனவே இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழரசு கட்சிக்குள் நடந்த தேர்தலும் ஆண்டின் முடிவிலும் நடந்த இரண்டு தேர்தல்களும் தமிழ்த் தேசிய அரசியலின் சீரழிவுகளை வெளியே கொண்டு வந்தன.

எனினும் செப்டம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டலாம் என்ற நம்பிக்கைகளைப் பலப்படுத்தியது. இந்த ஆண்டில் தமிழ் மக்களுக்கு கிடைத்த குறிப்பிட்டுச் செல்லக் கூடிய ஓரனுபவம் அது.

கட்சிகளைக் கடந்து மக்களைத் திரட்டலாம் என்ற நம்பிக்கைகளை அது புதுப்பித்தது. அந்த அனுபவத்தின் தொடர்ச்சியாக உழைத்தால் மட்டும் தான் புதிய ஆண்டில் தமிழ் மக்கள் வெற்றி பெறலாம்.

# அநுரவின் சீனப் பயணம்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்தியாவுக்கான மூன்று நாள் பயணத்தை முடித்துக் கொண்ட நிலையில் ஜனவரி மாதம் நடுப்பகுதியில் சீனாவுக்கான ஐந்து நாள் பயணத்தை மேற்கொள்ள இருக்கிறார்.

அவரது இந்த பயணம் தொடர்பாக, சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மாவோ நிங்கிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், நேரம் வரும்போது அது பற்றி அறிவிக்கப்படும் என கூறியிருக்கிறார்.

அதாவது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் பயணம் தொடர்பான தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்திக் கொள்வதற்கு சீன அரசாங்கம் தயாராக இல்லை என்பது இதன் பொருள். இரண்டு நாடுகளுக்கும் இடையில் நெருக்கமான உறவுகள் உள்ளன. அதனை வலுப்படுத்தும் வகையில் இந்த பயணம் அமையும் என்ற நம்பிக்கை சீனாவுக்கு இருந்தாலும் இந்தப் பயணத்தின் போது பேசப்படும் விடயங்கள் அல்லது விளக்கம் காணப்பட இருக்கின்ற விடயங்கள் தொடர்பாக, எந்த தகவல்களையும் கசிந்து விடாமல் பாதுகாக்க பெய்ஜிங் விரும்புகிறது.

அதற்குக் காரணம், இந்தியா என்பதில் சந்தேகம் இல்லை. இலங்கையில் சீனாவின் சில திட்டங்களை அல்லது நகர்வுகளை தடுப்பதில் இந்தியா முக்கிய பங்கு வகித்திருக்கிறது. அண்மையில் ஊடகவியலாளர்களை சந்தித்த சீனத் தூதுவர் கி சென் ஹொங் இரண்டு முக்கியமான சம்பவங்களை குறிப்பிட்டிருந்தார்.

ஒன்று, பாக்கு நீரிணையின் மூன்று தீவுகளில், கலப்பு மின் திட்டங்களை அமைப்பதற்கு சீன நிறுவனத்துடன் இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட உடன்பாடு, இந்தியாவின் அழுத்தங்களை அடுத்து இரத்து செய்யப்பட்டது. இன்னொன்று, சீன ஆய்வு பல்கள் இலங்கை கடற்பரப்பில் ஆய்வு மேற்கொள்ள திட்டமிட்டிருந்த நிலையில், இந்தியாவின் அழுத்தங்களினால், இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு ஆய்வு கப்பல்களை ஆய்வு மேற் கொள்வதற்கு தடை விதித்தமை.

இந்த இரண்டுமே சீனாவுக்கு கடும் எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை அரசாங்கம் இந்த விடயங்களில் நடுநிலையுடன் செயல்படவில்லை என்ற ஏமாற்றமும் சீனாவிடம் இருந்தது.

இதில் முதலாவது திட்டம், கோட்டாபய ராஜபக்ஷவின் பதவிக்காலத்தின் போதே நிறுத்தப்பட்டது. இரண்டாவது திட்டம் தான் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டது.

இப்போது ஆட்சியில் இருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எத்தகைய முடிவை எடுக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பில் சீனா இருக்கிறது. இலங்கை அரசாங்கம் கொள்கையை பின்பற்ற என்றும், எந்த நாட்டுக்கும் சார்பில்லாத வகையில் நடுநிலையான போக்கில் செயற்பட வேண்டும் என்றும் தமது நாடு எதிர்பார்ப்பதாக சீனத் தூதுவர் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை எந்த நாட்டின் தலையீட்டுக்கும் அஞ்ச வேண்டியது இல்லை, அடிபணிய வேண்டியதில்லை, ஏனென்றால் இலங்கை ஒரு சுதந்திர நாடு என்பதையும் அவர் நினைவுபடுத்தியிருந்தார். அதாவது, இந்தியாவின் அழுத்தங் களின் பேரில் இலங்கை அரசாங்கம் முடிவு எடுக்கக் கூடாது, இந்தியாவின் சார்பில் செயற்படுகின்ற போக்கில் இருந்து விடுபட வேண்டும் என்பதே சீனாவில் மறைமுகமான செய்தியாக இருந்தது. அப்படி நடுநிலையான போக்கில் செயற்படும் வரைக்கும் இலங்கை அரசாங்கத்துக்கு சீனா ஆதரவு வழங்கும் என கீ சென்ஹொங் உறுதியளித்திருந்தார். இந்த சூழலில், எதிர்வரும் 31ஆம் திகதியுடன், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களுக்கு விதித்த தடை முடிவுக்கு வரப்போகிறது. அதற்குப் பின்னர், இந்த தடையை நீடித்துக் கொள்ளும் நோக்கம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடம் இல்லை.



அதற்கு மாறாக வெளிநாட்டு ஆய்வு கப்பல்களின் வருகை தொடர்பாக தீர்மா னங்களை எடுப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட உள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருந்தார்.

இந்த ஆண்டு இறுதிக்குள் அந்த குழு நியமிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். ஆனால், இது வரை அந்தக் குழுவை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதேவேளை, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீன பயணத்துக்கு பின்னர் ஆய்வுக் கப்பல்களை இலங்கைக்கு அனுப்புவது தொடர்பாக சீனா தீர்மானங்களை எடுக்க உள்ளதாக கூறப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் சீனப் பயணத்துக்கு முன்னோடியாக, சீனாவின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். சீன மக்கள் குடியரசின் அரசியல் ஆலோசனை சம்மேளன (CPPCC) தேசியக் குழுவின் உப தலைவர் கின் பொயோங் இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி சந்தித்து பேச்சு நடத்தி இருந்தார்.

மீண்டும் கடல்சார் ஆராய்ச்சிகளை தொடங்குவது தொடர்பாகவும் அவர் கலந்துரையாடி இருந்தார். இந்த சூழலில் ஜனாதிபதியின் சீன பயணத்தின் போது, சீன ஆய்வுக் கப்பல்களுக்கு அனுமதி அளிப்பது தொடர்பான ஒரு தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிகிறது. ஆனால், அதனை இலங்கை அரசாங்கத்தினால் வெளிப்படையாக மேற்கொள்ள முடியாது.

அவ்வாறான ஒரு தீர்மானத்தை அரசாங்கம் எடுத்தால், இந்திய தரப்பில் இருந்து அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். ஆனால், சீனாவை பொறுத்தவரையில் இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் சுயமாக தீர்மானம் எடுக்க வேண்டும், பக்க சார்பின்றி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

இத்தகைய சூழல் இலங்கை அரசாங்கத்துக்கு சிக்கலான ஒன்றாகவே இருக்கும். ஆனால், இலங்கை அரசாங்கத்தை சீனா நெருக்கடிக்குள் தள்ள விரும்பினால் இந்த விவகாரத்தில் வெளிப்படையான தீர்மானம் எடுக்குமாறு, பெய்ஜிங் அழுத்தம் கொடுக்கும். அதேவேளை, இலங்கை அரசாங்கத்தை பிரச்சினைகளுக்குள் சிக்க வைக்காமல், இராஜதந்திரமாக நடந்து கொள்வதற்கு சீனா முற்படுமேயானால் இந்த விடயத்தில் இந்தியாவின் கோபத்தை கிளறுவதற்கு முற்படாது. இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க விடம் இந்தியா சிக்கலான விடயங்களை அணுகவில்லை.

குறிப்பாக, தமிழர் பிரச்சினைக்கான தீர்வு, 13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம், மாகாண சபைகளுக்கு தேர்தலை நடத்துவது போன்ற விடயங்களில் இந்தியா பெரிய அழுத்தங்களை கொடுக்கவில்லை. இரண்டு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையிலும் அந்த விடயங்கள் முற்றுமுழுதாக தவிர்க்கப்பட்டிருந்தன.

அதற்கு காரணம், இலங்கை அரசாங்கத்திடம் இருந்து இந்தியா சில உத்தரவாதங்களைப் பெற வேண்டி இருந்தது. தனது நலன் களை பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கை அரசாங்கத்துடன் முரண்படாத போக்கை கையாள புதுடெல்லி தீர்மானித்திருந்தது.

இரண்டு நாடுகளுக்கும் சாதகமான ஒரு நிலையை உருவாக்கியது. கொழும்பும் புது டெல்லியும் ஒரு சாத்தியமான புள்ளியில் இணைந்து கொள்வதற்கான சூழலை ஏற்படுத்தியது. அதே போன்று, இராஜதந்திரத்தை சீனாவும் கையாள முற்படுமேயானால் இலங்கை அரசாங்கத்துக்கு சிக்கல் வராது. இலங்கையில் சீனா தனது நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, இந்தியாவுடன் தொடர்புடைய விடயங்களில் அல்லது இந்தியாவுக்கு சந்தேகத்தை அல்லது சர்ச்சையை ஏற்படுத்துகின்ற விடயங்களில் கவனம் செலுத்தாமல், பெய்ஜிங் ஒதுங்கிக் கொள்ளக் கூடும்.

இப்படி ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டால் அது இலங்கை அரசாங்கத்துக்கு மிக மிக சாதகமான நிலையாக இருக்கும். ஏற்கனவே இப்படி ஒரு சாதகமான நிலை புதுடில்லிக்கும் கொழும்புக்கும் இடையே ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய நிலை, பெய்ஜிங் கிற்கும் கொழும்புக்கும் இடையில் உருவாகும் பட்சத்தில், அநுரகுமார் திசாநாயக்க அரசாங்கம் பூகோள அரசியல் போட்டியை வெற்றிகரமாக கையாளுகின்ற சூழல் ஏற்படும்.

மாறாக, புதுடில்லியுடன் முரண் போக்கை கடைப்பிடிக்கும் ஆர்வத்தில் சீனா ஏட்டிக்கு போட்டியான அணுகுமுறையை கையாளத் தொடங்கினால், அதன் விளைவு இலங்கைக்கு மாத்திரமல்ல, சீனாவுக்கும் பிரச்சினையான ஒன்றாகவே இருக்கும்.

அநுரகுமார திசாநாயக்கவின் சீனப் பயணமானது இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில், இரு பெரும் வல்லரசுகளை கையாளும் விடயத்தில் தீர்க்கமான முடிவு ஒன்றை எட்டுகின்ற வாய்ப்பு இருக்கிறதா என்பதை புரிந்து கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

# SUZUKI மோட்டர்ஸ் நிறுவனத்தின் ஒசாமு சுசுகி காலமானார்

சுசுகி மோட்டர்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் இந்திய கார் சந்தையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய தொழிலதிபருமான ஒசாமு சுசுகி, தனது 94ஆவது வயதில் காலமானார். லிம்போமா நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த அவர், கடந்த டிசம்பர் 25ஆம் திகதி உயிரிழந்ததாக அந்நிறுவனம் தரப்பில் தெரிவித்துள்ளது.

ஜப்பான் நாட்டின் கெய்ரோவில் பிறந்த ஒசாமு, உலகப் புகழ் பெற்ற சுசுகி மோட்டார்ஸ் குழுமத்தின் நிறுவனர் குடும்பத்துடன் திருமணம் செய்த பின் அந்த தொழிலில் முன்னணி நபராக செயலாற்ற தொடங்கினார். 1958ஆம் ஆண்டு சுசுகி குழும தொழிலில் சேர்ந்த அவர், 1978இல் நிறுவனத்தின் தலைவரானார். 1982ஆம் ஆண்டு அவர் இந்திய ஓட்டோமொபைல் சந்தையில் தடம் பதித்தது திருப்புமுனையாக அமைந்தது. இந்தியாவின் மருட்டி நிறுவனத்துடன் கூட்டாக இணைந்து மருட்டி சுசுகி கார்களை தயாரித்து விற்பனை செய்யத் தொடங்கினார். குறிப்பாக இந்த நிறுவனத்தின் மருட்டி 800 கார், இந்திய மற்றும் இலங்கைச் சந்தையில் பிரபலமான காராக மாறியது.

மத்தியதர குடும்பங்களுக்கு கட்டுப்படியாகும் விலையில் இந்த கார் இருந்தது. அப்போது தொடங்கி தற்போது வரை, இந்திய கார் சந்தையில் சுசுகி நிறுவனத்தின் பங்களிப்பு முன்னிலையில் உள்ளது. தற்போதும், இந்திய கார் சந்தையில் மருட்டி சுசுகி, 40 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளது.

மறைந்த ஒசாமு சுசுகிக்கு, சோகோ என்ற மனைவியும் 3 பிள்ளைகளும் உள்ளனர். ஒசாமுவின் மறைவுக்கு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட சர்வதேச நாடுகள் பலவற்றின் தலைவர்கள், தங்களது இரங்கலைத் தெரிவித்துள்ளனர். ஓட்டோமொபைல் துறையில் அவரது தொலைநோக்கு பார்வை, உலக அளவில் பெரும் மாற்றத்தை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத் தக்கது.



# யாழ்.மருத்துவமனையில் நடப்பது என்ன?

இலங்கையில் நான்கு தேசிய வைத்தியசாலைகளும் பதின்மூன்று போதனா மருத்துவமனைகளும் உண்டு. இதை விட மாவட்ட மருத்துவமனைகள் பிரதேச மருத்துவமனைகள், கண் மருத்துவமனைகள், குழந்தைகளுக்கான மருத்துவமனைகள், புற்றுநோயாளிகளுக்கான மருத்துவமனைகள், கிராமிய வைத்தியசாலைகள் எனப் பல உள்ளன.

ஆனால், யாழ்ப்பாண மருத்துவமனையில் தான் அதிகரித்த உயிரிழப்புகளும் மருத்துவக் கொலைகளும், மருத்துவத் தவறுகளும் நடப்பதாக சமூக வலைத்தளங்களில் பரப்புரை செய்யப்படுகிறது. இந்தப் பரப்புரையில் படித்தவர்கள், பொறுப்பான பதவிகளில் இருப்போர் தொடக்கம் பொழுதுபோக்காக எழுதுவோரும் ஈடுபடுகிறார்கள்.

இவற்றோடு இப்பொழுது மருத்துவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இராமநாதன் அருச்சுனாவும் ஒரு தொகையான குற்றச் சாட்டுகளை அடுக்குகிறார். இந்தக் குற்றச்சாட்டுகளை அவர் பாராளுமன்றத்தில் குறிப்பிடும் போது அது உரிய முறையில் தெரிவிக்கப்படவில்லை என்று ஹன்ஸ் ஸாட்டிலிருந்தே நீக்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் தனிப்பட்ட முறையிலான குற்றச்சாட்டுகள் என்ற அடிப்படையில் நோக்கப்பட்டு பாராளுமன்றப் பதிவேட்டில் சேர்த்துக் கொள்ளப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

ஆனாலும் சமூக ஊடகங்களிலும் அருச்சுனாவினாலும் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மீதும் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி மீதும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. இவ்வாறு மேற்கொள்ளப்படும் பரப்புரையில் இரண்டு விடயங்கள் முன் வைக்கப்படுகின்றன.

1.போதனா மருத்துவமனையில் நடந்த – நடக்கின்ற மருத்துவத் தவறுகள், குறைபாடுகள், குற்றங்கள் மற்றும் ஊழல் எனப்படுபவை.

மெய்யாகவே அங்கே பெருந்தவறுகளும் ஊழலும் தொடர்ச்சியாக நடக்கிறது என்றால் அதை ஆதரங்களோடு பட்டியற்படுத்த வேண்டும். ஆனால் அப்படி யாரும் முன் வைப்பதைக் காணமுடியவில்லை வைஷாலினி என்ற ஒரு குழந்தையின் (நோயாளியின்) கை துண்டிக்கப்பட்டது மட்டுமே மிகப் பெரிய குற்றச்சாட்டாகக் குறிப்பிடப்படுகிறது. ஆனால், அந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சிற்கு முறைப்பாடு செய்யப்பட்டு, அது உரிய நிபுணர் குழுவின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் பகிரங்கமாக அறிவித்துள்ளது.

அந்த அறிவித்தலில் தவறு இருந்தாலோ பாதிப்புக்கு உரிய நிவாரணம் கிடைக்கவில்லை என்றாலோ குறித்த நோயாளரான வைஷாலினியின் பெற்றோர் — அல்லது அவர்கள் சார்பாக பொது அமைப்பினரோ யாரோ வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அதன் மூலம் உரிய நிவாரணத்தைக் கோரலாம். குற்றவாளிகள் அல்லது தவறிழைத்தோர் நீதிமன்றத்தின் மூலம் தண்டிக்கப்படுவர். இழப்பீட்டையும் கோரலாம். இதுதான் இந்த மாதிரியான பிரச்சினைக்கான அரசாங்க வழிமுறையாகும்.

ஆனால், பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வைஷாலினிக்கு ஆரம்ப நிலை மருத்துவம் தனியார் மருத்துவமனையொன்றிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அது பலிதமாகவில்லை என்ற நிலையிலேயே போதனா மருத்துவமனைக்கு வைஷாலினி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கே சிகிச்சையின் போது கை துண்டிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான காரணம் போதனா மருத்துவமனையின் சிகிச்சையின் போது நடந்ததா அல்லது தனியார் மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சையின் போது உருவாகியதா என்பதை நிபுணர் குழுவின் அறிக்கையே சொல்லும். அதுவரை நாம் இது குறித்துப் பேச முடியாது. ஆனால், வைஷாலியின் விடயம் மிகப் பாரதூரமானது. அது நியாயமான முறையில் அணுகப்பட வேண்டியது.

இதேவேளை இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு உண்மையைச் சொல்ல



வேண்டும். தொடக்கத்தில் தனியார் மருத்துமனைகளில் சிகிச்சைக்காகச் செல்கின்ற (சேர்க்கப்படுகின்ற) பலர், ஒரு கட்டத்தில் அங்கிருந்து விடுவிக்கப்பட்டு போதனா மருத்துவமனைக்கு அல்லது மாவட்ட மருத்துவமனைகளுக்கு வருகிறார்கள். அப்படி வருவோரில் பலரும் உரிய சிகிச்சையைப் பெற்று சுகமடைந்து வெளியேறிச் செல்கிறார்கள். சிலர் உயிரிழக்க நேரிடுகிறது. இந்த உயிரிழப்புகள் தொடர்பான பதிவும் புள்ளி விவரமும் குறித்த மருத்துவமனைகளின் கணக்கிலேயே சேர்க்கப்படுகிறது.

இது யாழ்ப்பாணத்தில் மட்டும் நடப்பதல்ல. இலங்கை முழுவதிலும் அவதானிக்கப்படுகின்ற நிலையாகும். ஆகவே அப்படி வருகின்ற நோயாளர்களின் தொடக்க நிலைச் சிகிச்சை உண்டாக்கும் பாதிப்பை குறித்த அரச மருத்துவமனையே ஏற்க வேண்டியுள்ளது. இதற்கான தனியார் மருத்துவமனையிலிருந்து சிகிச்சைகளை முறித்துக் கொண்டு வருகின்ற நோயாளிகளை தாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்று அரச மருத்துவமனைகள் சொல்ல முடியாது. ஆனால் அதைத் தனியார் மருத்துவமனைகள் சொல்லலாம். அவை சொல்லித் தப்பிக் கொள்கின்றன. இது ஒரு சுருக்கக் குறிப்புத் தான். இதைப்பற்றி விரிவாகப் பேசினால் மேலும் பல அதிர்ச்சியளிக்கும் உண்மைகளும் புள்ளிவிவரங்களும் வெளியாகும். ஆகவே இந்தப் பிரச்சினையை இந்த யதார்த்தத்தோடு உண்மையின் அடிப்படையிற்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

தவிர, போதனா மருத்துவமனையில் ஊழல் நடக்கிறது என்றால், எந்தெந்த இடத்தில் ஊழல் நடந்துள்ளது? யாரெல்லாம் அதில் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள் என அவற்றைக் குறிப்பிட வேண்டும். அதற்கான ஆதாரங்களை முன்வைப்பது அவசியம். அதுவும் இதுவரையில் யாராலும் முன்வைக்கப் பட்டதாக இல்லை.

ஆகவே பொத்தாம் பொதுவாக தமது கணக்குக்கு 'தர்ம அடி அடிப்பது' என்று சொல்வார்களே, அதைப்போல ஒவ்வொருவரும் தமக்குப் பட்டதை எழுதித் தள்ளுகிறார்கள். அப்படி எழுதப்படும் எந்தச் சொல்லுக்கும் மதிப்பில்லை. ஏனென்றால், ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் அவதூறாகவே கருதப்படும். உண்மையும் அதுதான். எனவே நடந்து கொண்டிருப்பது அவதூறு என்ற முடிவுக்கே நாம் வர முடியும். இப்படி அவதூறு செய்யப்படுவதற்கான காரணம் என்ன என்பதை இந்தக் கட்டுரையின் இறுதியில் பார்க்கலாம்.

2.தனிப்பட்ட முறையில் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி மீதான நிர்வாகக் குறைபாடுகள் என்ற குற்றச்சாட்டுகள். அதாவது நடக்கின்ற மருத்துவத் தவறுகள், குற்றங்கள், குறைபாடுகள் தொடர்பாகப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி உரிய நடவடிக்கை எடுக்காமல், தவறிழைத்தோரைப் பாதுகாக்கின்றார் என்பது. அத்துடன் ஊழலுடன் சத்தியமூர்த்தி நேரடியாகச் சம்மந்தப்படுகிறார் என்பதாகச் சொல்லப்படுவது.

அத்துடன் போதனா மருத்துவமனையில் தொண்டு அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருப்போருக்கான பணி நியமனங்கள் மற்றும் ஊதியம் தொடர்பாக உரிய நடவடிக்கையை எடுக்கத் தவறியமை என்ற குற்றச்சாட்டு. இந்தப் பிரச்சினையைக் கையில் தூக்கிக் கொண்டே அருச்சுனா பணிப்பாளரின் பணிமனைக்குச் சென்றிருக்கிறார். உண்மையில் இதனுடைய தாற்பரியம் என்ன என்று அருச்சுனாவுக்குத் தெரியும். அவரும் ஒரு காலகட்டத்தில் மருத்துவ நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றியவர். அத்துடன் வடக்கினதும்



இலங்கையினதும் அரசியல் நிர்வாகச் சூழலை விளங்கியவர். அப்படி விளக்கத்தைக் கொண்டுள்ள அருச்சுனா, இந்தத் தொழிலாளர் விவகாரத்தைத் தனியே பணிப்பாளர் தீர்த்து வைக்க வேண்டும். அல்லது பொறுப்புச் சொல்ல வேண்டும் என்று கேட்பது நகைப்பிற்குரியது.

நிரந்தரப் பணிகளுக்கான ஆட்சேர்ப்புகளை எந்தவொரு அரச நிறுவனத்தின் எந்த அதிகாரியும் தன்னிச்சையாகச் செய்ய முடியாது. அதற்கான அனுமதியைக் கோரி, அது கிடைத்த பின், அதற்குரிய நேர்முகத்தேர்வு என உரிய ஒழுங்குகளின் அடிப்படையிலேயே அதைச் செய்ய முடியும். அப்படித்தான் இதற்கு முன்னரும் பல நிறுவனங்களிலும் நடந்துள்ளது. ஆகவே அதற்கான குற்றச்சாட்டை எந்த அடிப்படையில் அருச்சுனா முன் வைத்தார் என்பது கேள்வியே. இது தனிப்பட்ட ரீதியில் ஒரே துறைக்குள் பணியாற்றிய இருவருக்கிடையிலான பிணக்காகவே பார்க்க முடிகிறது.

இந்த அடிப்படையிலேயே அருச்சுனாவின் பாராளுமன்ற உரை நீக்கப்பட்டதும் போதனா மருத்துவமனைக்குள் தேவையில்லாமல் செல்லக் கூடாது என நீதிமன்றம் அருச்சுனாவைக் கட்டுப்படுத்தியதும் அமைகிறது.

சொல்லப்படும் ஊழல் விவகாரத்தைப் பேசுவதாக இருந்தாலும் அதையும் பட்டியற்படுத்துவது அவசியமாகும். அவை என்ன அடிப்படையில் தவறு எனத் தெரியப்படுத்துவது முக்கியமானது. இங்கே சில கேள்விகள் எழுகின்றன.

1.இப்படிப் பரப்புரை செய்யப்படும் அளவுக்கு உண்மையில் போதனா

**கட்டுரையாளர்:-**
**கிளிநொச்சியில் இருந்து**
**– கருணாகரன் –**



மருத்துவமனையில் தொடர்ந்தும் தவறுகள் நடக்கிறதா? அதிலும் மருத்துவக் கொலைகள் என்பது மிகப் பாரதூரமானது. சிகிச்சையின் போது பல காரணங்களால் உயிரிழப்புகள் நேர்கின்றன. அது வேறு. மருத்துவக் கொலை என்பது திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதாகும். அப்படி ஏதும் நடந்திருந்தால் அதைச் சீரியஸாக எடுக்காமல் விடும் தரப்புகளும் தவறுக்கு உடந்தையாகின்றன. ஆகவே இதைக்குறித்து உரிய தரப்புகள் சீரியஸாகவே சிந்திக்க வேண்டும்.

2. தவறுகள் தொடர்ந்து நடக்கிறது என்றால், அந்தத் தவறுகளை உரியவர்கள் ஏன் பட்டியற்படுத்துவதில்லை? ஏன் அவற்றை உரிய இடங்களுக்கு (ஆளுநர், சுகாதார அமைப்பு உட்பட்ட நிர்வாக அடுக்குகளுக்கு) உரிய முறையில் தெரியப்படுத்துவதில்லை?

3. அப்படித் தெரியப்படுத்தியிருந்தால் அவற்றின் விவரம் என்ன? அதாவது அதற்குப் பின் என்ன நடந்தது? உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்கவில்லையா? பொருத்தமான நடவடிக்கையை உரிய தரப்பினர் மேற்கொள்ளவில்லை என்றால் அந்தத் தரப்புகளும் தவறிழைத்ததாக அல்லவா கருத வேண்டும்? அவையும் தவறுகளுக்கும் பாதிப்புகளுக்கும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், மக்கள் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை.

4.சொல்லப்படும் அளவுக்கு யாழ்ப்பாணப் போதனா மருத்துமனையில் தவறுகளும் மருத்துவக் கொலைகளும் நடப்பதாக இருந்தால் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடபகுதியில் உள்ள மக்கள் அமைப்புகள், புத்திஜீவிகள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் என அனைத்துத் தரப்பினரும் மௌனம் காப்பது ஏன்? அவர்களும் இந்தத் தவறுகளுக்கு உடந்தையாக இருக்கிறார்களா? தவறுகளோடு (20ம் பக்கம் பார்க்க)

Friends MATRIMONY



www.friendsmatrimony.com
+1 647 709 1761 | +1 647 709 1536
+1 647 700 7208 | +1 416 477 6854
GTA Squre-5215 Finch Ave. E. Unit 256 and 257
Toronto, M1S 0C2




## மணமகள்

**ID08120873 F** — 25yrs, 5'4" , Annulled , Not Specified , N/A Sevai , Bachelors.. , ECA , Canada

**ID08120869 F** — 40yrs, 5'3" , Single , Aayilyam , N/A Sevai , High School , Sales Excutive , Sri Lanka

**ID08120868 F** — 42yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Pharmacy , Sri Lanka

**ID08120861 F** — 33yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Work , Canada

**ID08120860 F** — 29yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Work , Canada

**ID08120859 F** — 33yrs, 5'1" , Single , Not Specified , N/A Sevai , Postgraduate.. , Work , Canada

**ID08120858 F** — 31yrs, 5'3" , Single , Kettai , N/A Sevai , Masters Degree , Health network , Canada

**ID08120857 F** — 33yrs, 5'6" , Single , Swaathi , 2 Sevai , Masters Degree , Project manager , Canada

**ID08120856 F** — 23yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120728 F** — 40yrs, 5'4" , Widowed , Not Specified , N/A Sevai , High School , Teacher , Canada

**ID08120727 F** — 24yrs, 4'5" , Single , Avittam , 3 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120723 F** — 41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , House of Nursing , Malaysia

**ID08120718 F** — 29yrs, 5'5" , Single , Chithirai , 10 Sevai , Masters Degree , Assistant.. , Canada

**ID08120685 F** — 22yrs, 5'4" , Single , Uthirattathi , N/A Sevai , Bachelors.. , Student Canada

**ID08120650 F** — 26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

**ID08120711 F** — 30yrs, 5'3" , Single , Bharani , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120667 F** — 25yrs, 5'1" , Single , Thiruvaathirai , N/A Sevai , High School , Home , Sri Lanka

**ID08120650 F** — 26yrs, 4'11" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Law student ,Sri Lanka

**ID08120803 F** — 21yrs, 4'11" , Single , Revathi , N/A Sevai , High School , Beautician , Canada

**ID08120804 F** — 29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120805 F** — 30yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Development.. , Sri Lanka

**ID08120806 F** — 27yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Audit firm , Sri Lanka

**ID08120807 F** — 27yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Beautician.. , Sri Lanka

**ID08120808 F** — 31yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Acadamic Staff , Sri Lanka

**ID08120809 F** — 32yrs, 5'2" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Accountant , United Kingdom

**ID08120822 F** — 22yrs, 5'3" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , RN , Canada

**ID08120830 F** — 28yrs, 5' , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Senior Consultant , United Kingdom

**ID08120804 F** — 29yrs, 5'6" , Single , Aayilyam , 1 Sevai , Bachelors.. , HR Manager , Canada

**ID08120799 F** — 5yrs, 5'3" , Divorced , Poosam , 5 Sevai , Bachelors.. , Teacher , Sri Lanka

**ID08120795 F** — 31yrs, 5'4" , Single , Aayilyam , 9 Sevai , Bachelors.. , Human Resources.. , Canada

## மணமகன்



**ID08120874 M** — 35yrs, 5'8" , Not Specified , Not Specified , N/A Sevai , Diploma , Tourism , United States

**ID08120870 M** — 29yrs, 5'8" , Single , Makam , 8 Sevai , High School , Work , Sri Lanka

**ID08120867 M** — 39yrs, 5'9" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Architect , Canada

**ID08120866 M** — 24yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Student , Sri Lanka

**ID08120864 M** — 34yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120863 M** — 32yrs, 5'10" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Own business , Canada

**ID08120862 M** — 28yrs, 5'7" , Single , Revathi , N/A Sevai , Masters Degree , Work , Canada

**ID08120855 M** — 29yrs, 5'6" , Single , Not Available , N/A Sevai , High School , It , Sri Lanka

**ID08120850 M** — 33yrs, 5'6" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , RCMP , Cambodia

**ID08120717 M** — 33yrs, 5'8" , Annulled , Thiruvonam , 6 Sevai , Bachelors.. , Financial.. , Canada

**ID08120715 M** — 27yrs, 5'8" , Single , Chathayam/sadayam , 8 Sevai , Bachelors.. , Assistant.. , Canada

**ID08120709 M** — 38yrs, 5'4" , Single , Hastham , 6 Sevai , Diploma , CNC Machine.. , Canada

**ID08120613 M** — 32yrs, 5'7" , Single , Makam , N/A Sevai , Bachelors.. , Engineer Canada

**ID08120474 M** — 28yrs, 5'7" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , AGM , Sri Lanka

**ID08120335 M** — 30yrs, 5'7" , Single , Revathi , 4 Sevai , Diploma , Business-.. , Canada

**ID08120270 M** — 34yrs, 5'8" , Single , Thiruvaathirai , 10 Sevai , Bachelors.. , Data Analyst , Canada

**ID08119698 M** — 33yrs, 6'4" , Single , Makam , 10 Sevai , Bachelors.. , Software Engineer , Canada

**ID08120730 M** — 28yrs, 5'5" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Engineering ,Sri Lanka

**ID08120810 M** — 42yrs, 6' , Single , Uthiram , N/A Sevai , Bachelors.. , Executive , Sri Lanka

**ID08120812 M** — 32yrs, 5'7" , Single , Avittam , 10 Sevai , Masters Degree , Cyber Security.. , Sri Lanka

**ID08120813 M** — 30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Bachelors.. , Pharmacy , Canada

**ID08120814 M** — 43yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , Bachelors.. , Manager , Canada

**ID08120816 M** — 22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Canada

**ID08120817 M** — 41yrs, 5'3" , Single , Not Specified , N/A Sevai , Diploma , Self Employee , Sri Lanka

**ID08120818 M** — 36yrs, 5'5" , Divorced , Not Specified , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120820 M** — 30yrs, 5'4" , Single , Not Specified , N/A Sevai , Masters Degree , Senior manager , Sri Lanka

**ID08120821 M** — 30yrs, 5' , Single , Avittam , N/A Sevai , Bachelors.. , Manager Sri Lanka

**ID08120829 M** — 38yrs, 5'8" , Single , Revathi , N/A Sevai , High School , Restaurant , France

**ID08120786 M** — 36yrs, 5'5" , Single , Chathayam/sadayam , N/A Sevai , High School , Carpenter , Sri Lanka

**ID08120710 M** — 22yrs, Not Specified , Not Specified , N/A Sevai , Not Specified , Not Specified , Sri Lanka

# தமிழரசுக்கு ஆண்டுகள் 75 ஆனது ஒன்றுமில்லை?

- அழகு குணசீலன் -

இலங்கை தமிழரசுக்கட்சிக்கு வயது எழுபத்தி ஐந்தாம்.

அதற்கு பிறப்பு முதல் இன்றுவரை அனைத்து தேர்தல்களிலும் அளிக்கப் பட்ட வாக்குகள் சமஷ்டிக்கானவை யாம்.

தமிழரசுக்கட்சி 75 ஆண்டுகளாக சமஷ்டி கோரிக்கையுடன் பயணிக்கிற தாம்.

தமிழரசு அரசியல்வாதிகளின் இந்த வார்த்தைகளில் உள்ள உண்மைத் தன்மை, அரசியல் நேர்மை என்ன?

ஒரு அரசியல் நிறுவனமான தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டு காலப் பகுதியை கொண்டாடுவது அவர்கள் நினைப்பது போன்று ஒன்றும், வெறு மனே கலண்டர் கணக்கல்ல. அக் கட்சியின் கொள்கை அடிப்படை யிலான செயற்பாட்டு அரசியலின் அடைவு மதிப்பீடு. கடந்த காலங்களில் அது பெற்ற அரசியல் வெற்றி, தோல்வி களை சுயவிமர்சனம் செய்வது. இதனை தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகர் எஸ்.ஜே.வி .செல்வநாயகத்தின் சிலை க்கு ஏணி வைத்து ஏறி ஆண்டு தோறும் மாலை போடுவதால் அடைய முடியாது.

1949 டிசம்பர் 18ம் திகதி, ஸ்தாபிக்க ப்பட்ட தமிழரசுக்கட்சி 1951 இல் தனது முதலாவது கட்சி மாநாட்டை திருகோணமலையில் நடாத்தியது. இதன் போது கட்சியின் தலைவராக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தெரிவு செய்யப்பட்டார். அதே திருகோண மலையில் தான் தமிழரசுக்கட்சியின் கடந்த கட்சி மாநாடும், தலைவர் தெரி வும் இந்த ஆண்டில் இடம்பெற்றது. இன்று யாருக்கு மாலை போடுகிறார் களோ அவரின் கொள்கைகளை நிரா கரித்து, அவரை அவமதித்து, பதவிக் காக கட்சியை குற்றக்கூண்டில் நிறுத்தியிருக்கிறார்கள். அதற்குள் பாரம்பரியம், பழம்பெருமை, பெரிய கட்சி என்ற கதையாடல்கள் வேறு.

திருகோணமலை முதல் மாநாட்டில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆற்றிய உரையில் ஒரு வாசகம் இது.

நாங்கள் எங்கள் நோக்கில் (சமஷ்டி) வெற்றி பெற கடவுள் எங்களுக்கு துணைபுரிவார்

அதே செல்வநாயகம் தனது இறுதிக் காலத்தில் கூறிய வார்த்தைகள் இவை.

தமிழ் மக்களை கடவுள் தான் காப் பாற்ற வேண்டும் இப்படி கடவுளின் நம்பிக்கையில் கட்சியை ஆரம்பித்து அதன் இயலாமையை இறுதியில் கடவுளிடம் ஒப்படைத்த கதைதான் தமிழரசுக்கட்சியின் 75 ஆண்டு காலக் கதை. இதன் அர்த்தம் செல்வநாயகத் தின் காலத்திலேயே அது தன் இலக்கு களில் தோற்று விட்டது. அந்த தோல்வியின் இயலாமை தான் அவர் தமிழ்மக்களை கடவுளிடம் பாரம் கொடுத்து பரலோகம் சென்ற கதை.

தமிழரசுக்கட்சி தம்பட்டம் அடிக் கின்ற இந்த பவளவிழா தமிழ்தேசிய பாராளுமன்ற அரசியலின் தோல்வி விழா. இதில் இன்னும் வேடிக்கை என்னவென்றால் இவர்கள் தமிழரசுக் கட்சி 75 ஆண்டுகளாக இயங்கியது என்று காட்ட முற்படுவது. தமிழரசுக் கட்சியானது தமிழர் கூட்டணி தமிழர்விடுதலைக் கூட்டணி என்ற வேறு போர்வையுடன் வீட்டு சின்னத் தையும் தவிர்த்து உதயசூரியன் சின்ன த்திலேயே 1974 முதல் 2004 வரை முப்பது ஆண்டுகள் தமிழர் கூட்டணி தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயர்களை போர்த்திக் கொண்டு செயற்பட்டது. 2004 பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப் பாக போட்டியிட்டது. அதன் சின்னம் உதயசூரியன். இந்த முப்பது ஆண்டு களில் தமிழரசுக்கட்சி என்பதும், அதன் சின்னம் வீடும் தேர்தல் திணை க்களத்தில் பதிவு செய்யப்பட்ட பேப்பரில் தான் இருந்தது.

புலிகளின் ஆசீர்வாதத்துடன் 2001 இல் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு




அமைக்கப்பட்டு, 2004 பாராளுமன்ற தேர்தலில் சட்டரீதியாக தமிழர் விடு தலைக்கூட்டணி பெயரையும், உதய சூரியன் சின்னத்தையும் பயன்படுத்தும் உரிமை ஆனந்தசங்கரிக்கு கிடைத்த தால் வேறுவழியின்றி மீண்டும் வீட்டு க்குள் நுழைந்தவர்கள் தான் இன் றைய தமிழரசுக்காரர்.

உண்மையில் தமிழரசு கட்சி என்பது தேர்தல் சின்னத்திற்காக மட்டும் புலி களின் அங்கீகாரத்துடன் பயன்படுத்தப் பட்ட புலிவீடு ! இப்படியிருக்கையில் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டை கணக்கிட்டு அத்தோடு அது படுத்து தூங்கிய உறங்கு கால மான தனிநாடு ஆயுதப்போராட்ட காலத்தையும் சேர்த்து பவள விழா கொண்டாட்டம் நடக்கிறது. தமிழரசு க்கட்சி 75 ஆண்டுகளாகவும், ஒவ் வொரு தேர்தல்களிலும் சமஷ்டி கூட்டாட்சிக்கு மக்களிடம் வாக்கு கேட்டது என்று தமிழரசுக்கட்சியினர் இன்று பேசியும், எழுதியும் வருவது தமிழ்த்தேசிய அரசியல் பெருங்கதை யாடல் –வரலாற்று திரிபு.

சமஷ்டி கட்சி என்று ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்ட தமிழரசுக் கட்சி சமஷ்டியை தனது நீண்ட கால அரசியல் இலக்காகக் கொண்டது. இந்த நீண்ட காலம் என்பது முக்கால் நூற்றாண்டையும் கடந்த வெறு அரசியல் பயணமாக நகரும் என்று எஸ்.ஜே.வி. கூட கனவிலும் நினைத் திருக்க மாட்டார். சமஷ்டி கோரிய தமிழரசுக்கட்சி அதை கைவிட்டு தனி நாட்டு தமிழீழக்கோரிக்கையை வட்டு க்கோட்டை பிரகடனத்தின் மூலம் முன் வைத்தது.

முரண் நகையாக ஜே.ஆர்.ஜெயவர்த் தன அரசாங்கத்தின் மாவட்ட சபை களை பிற்காலத்தில் ஏற்றுக் கொண் டது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் சௌ.தொண்டமானின் அனு சரணையுடன் மாவட்ட மந்திரிகளை ஏற்க விரும்பிய போதும், ஆலோசனை களை மேற்கொண்ட போதும் புலி களின் ஆயுத கலாச்சாரம் அந்த முடிவுக்கு குறுக்கே நின்றதால் அமிர்தலிங்கத்தின் அந்த விருப்பம் நிறைவேறவில்லை. அமிர்தலிங்கம் ஐந்து மாவட்ட மந்திரிகள் கேட்க ஜே.ஆர். மூன்று தான் தரலாம் என்ற இழுபறியில் மாவட்ட மந்திரி கனவு கலைந்து போனது.

அதிகாரங்கள் அற்ற மாவட்டசபை களை ஏற்றுக் கொண்டு, தேர்தலில் பங்கேற்று, மாவட்ட சபை நிர்வாக த்தை ஏற்று நடாத்தியவர்கள் இந்திய இலங்கை சமாதான உடன்படிக்கை மூலமான மாகாண சபையை ஏற்க முன்வரவில்லை. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க காலத்தில் நீலன் திருச்செல்வம் அவர்களின் முயற்சி யினால் முன்மொழியப்பட்ட பிராந்திய ங்களின் ஒன்றியத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நிராகரித்தது. இதற்கு காரணம் தனித் தமிழீழம் தான் தமிழர் கோரிக்கை என்ற கொள்கை ரீதியிலான வட்டுக்கோட்டை தீர்மானமா? சமஷ் டியை அடையக்கூடிய அதிகாரப் பகிர்வை வழங்கிய மாகாண சபையை மற்றும் பிராந்தியங்களின் ஒன்றிய கட்டமைப்பை இவர்கள் ஏற்க மறு தலித்தது ஏன்? இதற்கு காரணம் தமிழ் மக்களின் அரசியல் எதிர்கால த்தை விடவும் புலிகளில் இருந்து தப்பித்தல் அரசியல் பிழைப்பு முத ன்மை பெற்றிருந்ததாகும்.

இதுவரையான 1957 யூ லை 26 இல் செய்யப்பட்ட பண்டாரநாயக்கா செல்வ நாயகம் ஒப்பந்தம், 1965 மார்ச் 24 இல் செய்யப்பட்ட டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் என்பன வற்றை விடவும் 1987 யூ லை 29 இல் இந்திய இலங்கை அரசுகள் ஒப்பமிட்ட ஒப்பந்தம், சந்திரிகா அரசாங்கத்தின் பிராந்தியங்களின் ஒன்றியம் என்பன இனப்பிரச்சினைக்கான தீர்வில் எவ் வளவோ முன்னேற்றகரமான சமஷ்டி யின் நுழைவாயில். அது மட்டுமின்றி மாகாண சபை முறைமைக்கு இந்திய உத்தரவாதம் இருந்தது. இன்னும் சிலர் இந்திய –இலங்கை உடன்பாடு தமிழ் தரப்பாக புலிகளை ஒப்பந்தத்தில் ஒரு தரப்பாக ஏற்றுக் கொண்டு புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான ஒன்றாக அமைய வில்லை என்று கூறுகிறார்கள். இந்த குற்றச்சாட்டை தமிழரசுக்கட்சியின் அரசியல்வாதிகளும் கூறுகிறார்கள். 13 வது திருத்தம் ஆரம்ப புள்ளியே இல்லை என்று பூச்சியத்தில் நின்று கொண்டு 75 வருடத்தை சமஷ்டி தனிநாடு சமஷ்டி ஏக்கராட்சிய என்று சங்கீதக்கதிரை அரசியல் செய்பவர்கள் இவர்கள்.

இவர்கள் தான் மாகாணசபை முறையை அல்லது 13வது திருத் தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதில் இந்தியாவுக்கு பங்கு ண்டு என்று கூறுபவர்கள். இந்திய பிரதமர் மோடிக்கு கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதுபவர்கள். நாள் குறைந் தாலும் சந்திப்பு குறையாமல் இந்திய தூதரகத்தை மூன்று முறை வலம் வந்து தேங்காய் உடைத்து 13க்காக பூசைத்தட்டு கொடுத்து நேர்த்தி வைப்பவர்கள். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்காவின் இந்திய விஜயத்தின் போது அவருக்கு பிரதமர் மோடி அதிகபட்ச அழுத்தம் கொடுக்க வேண் டும் என்று கூவுபவர்கள். இப்போது இவர்களிடம் ஒரே ஒரு கேள்வி இத்தனைக்கும் இந்த ஒப்பந்தத்தில் புலிகளும், இலங்கை அரசாங்கமும் ஒப்பமிட்டிருந்தால் ஆகப்பிந்தியது முள்ளிவாய்க்காலோடு இந்த ஒப்பந்தத் தின் கதை முடிந்திருக்கும். காலாவதி யாகியிருக்கும். இன்றும் இந்தியாவை கோருவதற்கு இந்தியா ஒரு தரப்பாக ஒப்பமிட்டதாலேயே சாத்தியமாகிறது.

இதனால் தான் தமிழரசுக்கட்சி இன்று கூறுகின்ற தமிழ்மக்கள் சமஷ்டிக்கு கடந்த 75 ஆண்டுகளாக வாக்களித் தார்கள் என்பதில் உண்மையில்லை. 1970க்கு பின்னர் தமிழ் மக்கள் சமஷ்டித்தீர்வுக்கு வாக்களிக்கவில்லை. இது 2009 முள்ளிவாய்க்கால் முடிவு வரையான சகல பாராளுமன்ற தேர்தல் களிலும் புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கையாக காட்டப்பட்டது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு அமைக்க ப்பட்டு கடன் வாங்கப்பட்ட தமிழரசின் வீட்டு சின்னத்தில் போட்டியிட்ட போதும் அது சமஷ்டி கோரிக்கையை முன்வைத்த தேர்தல் அல்ல தமிழீழத்தி ற்கான தமிழ் மக்களின் அங்கீகாரத்தை, புலிகளை ஏகபிரதிநிதிகளாக இலங்கை அரசை, பிராந்தியத்தை, சர்வதேசத்தை அங்கீகரிக்க கோரிய தேர்தல். ஆகவே சமஷ்டி 1976 இல் வட்டுக்கோட்டை பிரகடனம் முதல் 2009 வரை கைவிட ப்பட்ட ஒன்று என்பதே தமிழரசின்



வரலாறு. அது மட்டுமின்றி தமிழரசு கட்சி தேர்தல் சின்னத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டது. 2009இல் ஆயுத ப்போராட்டம் அடைந்த படுதோல்வி யும், தமிழ்த்தேசிய பாராளுமன்ற அரசியல் பலவீனமும் மீண்டும் சமஷ்டி போர்வையை போர்த்த காரண மானது.

கடந்த 75 ஆண்டுகளில் தமிழ்த்தேசிய அரசியல் 1950–1975 சமஷ்டி காலப் பகுதியிலும், 1976–2009 தனித்தமிழீழ காலப்பகுதியிலும், 2010– 2024 மீண் டும் சமஷ்டி காலப்பகுதியிலும் தமிழரசுக்கட்சி, தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, மீண்டும் தமிழர சாக, தமிழரசு ஒரு பிரதான கட்சியாக இந்த முக்கிய அரசியல் தீர்வுக்கான இலக்குகளில் எதையும் நெருங்கக்கூட இல்லை. நல்லாட்சி கால அரசியல் அமைப்பு மாற்றம் என்பதும் வெறும் கண்துடைப்பாகவே இருந்துள்ளது. இனப்பிரச்சினைக்கான தீர்வில் மட்டு மன்றி போருக்கு பின்னரான எந்த கோரிக்கையிலும் தமிழரசுக்கட்சி கொழும்பிலோ, பிராந்தியத்திலோ, சர்வ தேசத்திலோ சாதிக்கவில்லை. காலத் திற்கு காலம் காற்று வளத்தைபார்த்து பட்டம் விடுதலே தொடர்கிறது. அது வும் இவர்களின் கணிப்பீடு எதிர் காற்றாக மாறியதே அதிகம். இதுதான் 75 ஆண்டுகால பழம்பெரும் பாரம் பரிய (20ம் பக்கம் பார்க்க)

# யாழ்.மருத்துவமனையில் நடப்பது என்ன?

(17ம் பக்கத் தொடர்ச்சி) போதனா மருத்துமனையைப் பாதுகாக்கிறார்களா? அப்படிக் குறிப்பிடுமளவுக்கு அங்கே தவறுகளும் குற்றங்களும் மருத்துவக் கொலைகளும் நடக்கவில்லை என்றால், சமூக வெளியில் வாரியிறைக்கப்படும் குற்றச்சாட்டுகளை இந்தத் தரப்புகள் மறுத்துரைக்காமலும் கேள்வி கேட்காமலும் மௌனமாக இருப்பது ஏன்? இவர்களும் தவறான சமூகப் போக்கை ஊக்கப்படுத்துகிறார்களா?

5.சமூக வெளியில் (வலைத்தளங்களிலும் YouTupe களிலும்) முன்வைக்கப்பட்டுச் சமூகத்தைக் கொந்தளிப்பாக்குவதற்கு முயற்சிக்கப்படும் குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக அரசியற் கட்சிகள், மக்கள் பிரதிநிதிகள் என்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கை என்ன? அவர்கள் கேளாச் செவியர்களாகவும் காணக் கண்ணர்களாகவும் இருப்பது ஏன்? சமூகத்தையும் மருத்துவமனையையும் மோத விட்டு வேடிக்கை பார்க்கிறார்களா?

6.யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு ஐந்துக்கும் மேற்பட்ட பத்திரிகைகளும் இரண்டு மூன்று தொலைக்காட்சிகளும் உள்ளன. இவற்றை விட குறிப்பிடத்தக்க இணையத் தளங்களும் உள்ளன. இந்த ஊடகங்கள் மேற்படி சமூக வலைத்தளங்களின் – அருச்சுனாவின் குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் கவனம் கொள்ளாதிருப்பது ஏன்?

டான் தொலைக்காட்சி மட்டும் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தியுடன் ஒரு நேர்காணலைச் செய்துள்ளதாக அறிய முடிகிறது. அதைத் தவிர்த்தால் பெரிய அளவில் இந்த விடயங்கள் பேசப்பட்டதாகத் தெரியவில்லை. ஏனையவை அவ்வப்போது நிலவரச் செய்திகளை மட்டும் அளிக்கின்றனவே தவிர, உரிய கள ஆய்வைச் செய்வதைக் காணவில்லை. ஏற்கனவே ஒரு தடவை உதயன் பத்திரிகையில் பணிப்பாளரின் விளக்கத்தை அடிப்படையாகக் கொண்டதொரு நேர்காணல் வந்திருந்தது.

7.2000 பேருக்கு மேல் பணியாற்றுகின்ற ஒரு அத்தியாவசிய சேவை மையமே யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனையாகும். ஏறக்குறைய 400 மருத்துவர்களும் 600 வரையான மருத்துவத் தாதிகளும் பல பிரிவுகளில் பணியாற்றுகின்றனர். 1300 நோயாளர் படுக்கைகள் உண்டு. கண், இருதயம், சிறுநீரகம், குழந்தைகள் பிரிவு, நரம்பியல், அவசர சிகிச்சைப் பிரிவு, எலும்பு முறிவுப்பகுதி என 100 க்கு மேற்பட்ட சேவை மையங்கள் உள்ளன. தினமும் 2500க்கு மேற்பட்ட கிளினிக் நோயாளர்கள் வருகை தருகின்றனர். 1000க்கு மேலான வெளிநோயாளர் சிகிச்சை பெறுகின்றனர்.

அப்படியிருந்தும் தற்போது (கடந்த சில ஆண்டுகளில் அல்லது சில மாதங்களில்) அளவுக்கு அதிகமான மருத்துவக் கொலைகளும் தவறுகளும் குற்றங்களும் மெய்யாகவே (பொது வெளியில் குறிப்பிடுவதைப் போல) நடப்பதாயின் அதற்கான பொறுப்பை இந்த மருத்துவ அணியினரும் ஏற்க வேண்டும். அதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும். இவை அனைத்துக்கும் நிர்வாகப் பணிப்பாளர் என்ற ரீதியில் மருத்துவர் சத்தியமூர்த்திக்குக் கூடுதல் பொறுப்பு இருந்தாலும் இவர்களுக்கும் கணிசமான பொறுப்புண்டு. அந்தப் பொறுப்பிலிருந்து தப்பிச் செல்ல முடியாது.

இதேவேளை பலரும் குறிப்பிடுவதைப் போல மருத்துவக் கொலைகளோ, குற்றங்களோ, தவறுகளோ அங்கே நடக்கவில்லை என்றால், அதை மறுத்துரைப்பதற்கான வழிகளில் மருத்துவ அணியினர் அதைச் செய்ய வேண்டும்.

ஏனென்றால், மருத்துவமனை என்பது மக்களின் குறிப்பாக நோயாளரின் நம்பிக்கைக்குரிய நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டிய ஒரு மையமாகும். நோயாளரின் உளநிலை பொதுவாகவே சமனிலைக் குறைவுடனேயே இருப்பதுண்டு. தமது நோய் குணமாகுமா? அதற்கான போதிய சிகிச்சை நடக்கிறதா? அதற்குரிய வளங்கள் உள்ளனவா? என்ற கேள்விகள் நோயாளரின் உளநிலையில் பொதுவாகவே கொந்தளிப்பை ஏற்படுத்துவதுண்டு. ஆகவே, அப்படியான சூழலில் மருத்துவமனையைப் பற்றி (மருத்துவ சேவையைப் பற்றி) பீதியூட்டும் செய்திகள் தொடர்ந்தும் பரப்பப்பட்டால், அதற்கு அனுமதியளித்தால் அவை உண்மையென்றே மக்களால் (நோயாளர்களால்) நம்பப்படும். அது அவர்களைப் பெரிதும் பாதிக்கும். அவர்கள் மிகப் பெரிய அவல நிலையைச் சந்தித்துள்ளதாக உணர்வார்கள்.



இதில் மிக மோசமாகப் பாதிக்கப்படுவோர் ஏழை மக்களாவர். அவர்களே கூடுதலாக அரச மருத்துமனைகளை நாடுகின்றவர்கள். அரச மருத்துவமனைகளே அவர்களுக்கு கதியாகும். இந்த நிலையில் உண்மையை வெளிப்படுத்தி, மக்களுக்கு (நோயாளருக்கு) நம்பிக்கையை அளிக்கும் பொறுப்புடன் நடக்க வேண்டியது மருத்துவ அணியினரின் கடமையாகும். அதுவே மக்களை (நோயாளரை) தெம்பூட்டும்.

8.பொறுப்பான தரப்புகளின் நடவடிக்கை. குறிப்பாக ஆளுநர், சுகாதார அமைச்சு உள்ளிட்ட தரப்புகள் உரிய குற்றச்சாட்டுகளைக் கவனத்திற் கொண்டு முறையான விசாரணைகளை ஆரம்பித்து உண்மைகளைக் கண்டறிய வேண்டும். உண்மைகளுக்கு அப்பாலான பொய்களைக் கட்டமைப்போரையும் அவதூறு செய்வோரையும் நடவடிக்கைக்கு உட்படுத்த வேண்டும். அதைச் செய்யாமல் தவறினால் அது சமூகத்திற்குப் பாரதூரமான பாதிப்பையே ஏற்படுத்தும். மட்டுமல்ல, இந்தப் பரப்புரையாளரின் சதிக்கு உடன்படுவதாகவும் அமையும்.

மீளவும் இங்கே வலியுறுத்தப்படுவது இது நோயாளரின் உளநிலையுடன் சம்மந்தப்பட்ட பாரதூரமான விடயமாகும். இந்தக் கட்டுரை கூட நோயாளரின் பாதுகாப்பு, அவர்களுடைய உளநிலை மற்றும் பொது நிலைமையைக் குறித்தே விடயங்களைப் பேச முற்படுகிறது. ஒரு சொல்லும் போதனா மருத்துவமனை நிர்வாகத்தையோ மருத்துவ அணியினரையோ வலிந்து பாதுகாப்பதற்கு முற்படவில்லை.

அதேவேளை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் பழி சுமத்தல்களையும் கண்டிக்கிறது. எனவே நோயாளர்களை உளச்சோர்வடைய வைக்கும் தீய முயற்சிக்கு இடமளிக்காமல் உரிய தரப்புகள் அனைத்தும் உடனடியாக முறையான விசாரணைகளை (நடவடிக்கைகளை) மேற்கொண்டு உண்மை நிலவரத்தை மக்களுக்குச் சொல்ல வேண்டும். வடமாகாணத்தில் மட்டுமல்ல, நாடு முழுவதிலும் அரச மருத்துமனைகளையே பெரும்பாலானோர் நாடும் சூழலே பொதுவாக உண்டு. அயாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையே வடக்கின் ஆதார (மைய) மருத்துவமனையாக உள்ளது. அது எந்தச் சூழலிலும் நம்பகத் தன்மையை இழக்க முடியாது. அப்படி நம்பகத் தன்மையை இழக்குமாக இருந்தால் அதனால் பயனடைவது தனியார் மருத்துவத்துறையாகவே இருக்கும். அது இந்தச் சமூகத்துக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய அநீதியாகும்.

இந்த நிலையில் நோக்கினால் யாழ்ப்பாணம் போதனா மருத்துமனை தொடர்பாகக் குறிப்பிடப்படும் விடயங்களைப் பொருட்படுத்தாமல் உதாசீனப்படுத்தினால், அது தனியார் மருத்துவத் துறையை வளர்ப்பதற்கே மறைமுகமாக உதவும்.

நாட்டிலுள்ள நூற்றுக் கணக்கான மருத்துவமனைகளில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மட்டும் தான் மிக மோசமான நிலை காணப்படுகிறதா? ஏனைய இடங்களில் தவறுகளே நடக்கவில்லையா? என்பதையும் அரசும் மக்களும் ஆழமாகச் சிந்தித்து அறிய வேண்டும்.

வடக்கில் மன்னார், சாவகச்சேரி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளில் அருச்சுனா வெளிப்படுத்திய பிரச்சினைகளைப் பற்றியும் விசாரிக்க வேண்டும். இங்கெல்லாம் பிரச்சினைகளின் உண்மைத் தன்மை என்ன? அவற்றை எப்படித் தீர்த்து வைப்பது என்பதற்கு அப்பால், அவற்றை வைத்தே தன்னுடைய அரசியல் அதிரடிப் பிரச்சாரங்களை மேற்கொள்ளும் உத்தியையே அருச்சுனா செய்கிறார். இதற்கு வாய்ப்பாக இன்றைய தகவல் உலகத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார். இது தன்னைத் தானே ஹீரோவாக்கிக் கொள்ளும் ஒரு உத்தியாகும். நிஜமான கதாநாயகர்களைக் கண்ட வரலாற்றுக்கு இத்தகைய நகைச்சுவையாளர்கள் சிரிப்பையே வரவழைக்கும்.

எனவே இவற்றைத் தீர விசாரித்து உண்மையைக் கண்டறிவதற்கு மேற் குறிப்பிட்ட புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், சிவில் அமைப்புகள், மதத் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசியற் கட்சிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பும் முயற்சிக்க வேண்டும்.

இல்லையெனில் நேர்மையான முறையில் அர்ப்பணிப்பாகச் சேவை செய்வோர் உளச்சோர்வடையக்கூடிய நிலையே ஏற்படும். மட்டுமல்ல, தவறான அபிப்பிராயம் சமூகத்தில் மேலோங்கியிருந்தால் அது மருத்துவமனையில் நோயாளருக்கும் மருத்துவத் துறையினருக்கும் எப்போதும் முரண்களையே உருவாக்கும். நோயாளிக்கும் மருத்துவருக்கும் இடையில் இடைவெளி இருக்குமானால் அது சிகிச்சையையே பாதிக்கும். குறிப்பாக நோயாளியின் உள, உடல் ஆரோக்கியத்தை.

தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் புதிய அரசாங்கம் நாட்டிலுள்ள அனைத்துத் துறைகளிலுமிருக்கும் குறைபாடுகளையும் சீர்திருத்தம் செய்யவுள்ளதாகக் கூறுகிறது. அப்படியானால் யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை விடயத்திலும் அது கவனம் செலுத்த வேண்டும்.

## தமிழரசுக்கு ஆண்டுகள் 75 ஆனது....

(19ம் பக்கத் தொடர்ச்சி) அரசியலால் மக்களுக்கு கிடைத்தது. தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் எஸ்.ஜே.வி. செல்வநாகத்தின் பயோகிராப்பியை எழுதிய பேராசிரியர் வில்சன், செல்வநாயகம் பற்றி இப்படி குறிப்பிடுகிறார்.

செல்வநாயகம் கேக் வேண்டும் என்பதற்காக பாண் வேண்டாம் என்று அடம் பிடிப்பவர் அல்லர் காலனித்துவ கலாச்சாரத்தில் வில்சன் கூறியதைத் தான் அரசியல் பத்தியாளர்கள் தமிழ்த்தேசிய கலாச்சாரத்தில் வேட்டி தான் வேண்டும் என்று அடம்பிடித்து தமிழ்த்தேசிய அரசியல் கோவணத்தையும் இழக்கும் நிலையில் வந்து நிற்கிறது என்கிறார்கள்.

இவர்கள் கோவணத்தோடு ஏறி செல்வநாயகத்தின் சிலைக்கு மாலை போட்டிருப்பதே அவருக்கு செய்யும் 75 ஆண்டு மரியாதையாக இருந்திருக்கும். இந்த நத்தார் காலத்தில் பாவ மன்னிப்புக் கோரலாகவும் அமைந்திருக்கும்.

## தமிழரசுக்கட்சியின் அரசியல் குழுவின்...

(8ம் பக்கத் தொடர்ச்சி) இது கட்சியை கட்சியை சுத்தப்படுத்தும் ஒரு செயற்பாடாகும். வைத்தியர் சிவமோகன், நாடாளுமன்ற தேர்தலின் போது கட்சியின் வேட்பாளருக்கு எதிராக பல போலியான குற்றச்சாட்டுக்களை முன் வைத்து, கட்சிக்கு பின்னடைவாக செயற்பட்டவர். இந்த நிலையில், இது தெடர்பாக அளிக்கப்பட்ட முறைப்பாடுகளை வைத்து விசாரணை நடத்தப் படும் வரை அவர் கட்சியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார். இதில் கட்சிக்குள் எந்த குழப்பமும் இல்லை.

ஒரு சில கோமாளி ஊடகங்கள் ஒரு சில கோமாளிகளை வைத்துக் கொண்டு, தமிழரசுக்கட்சிக்குள் குழப்பம் இருப்பது போல சமூக வலைதளங்களில் காட்டுவதால் தான் கட்சியில் குழப்பம் இருப்பது போல மக்களுக்கு வெளியில் தெரிகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தீர்க்கதரிசிகளின் ஒரே மாதிரியான கணிப்புக்கள்

(5ம் பக்கத் தொடர்ச்சி) 1930 ஆம் ஆண்டு ஹிட்லரின் அதிகாரத்திற்கு எழுச்சி மற்றும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜான் எஃப். கென்னடி படுகொலை செய்யப்படுவதையும் அவர் கணித்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் அவர் 2025ஆம் ஆண்டிற்கான இரண்டு கணிப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டு ஐரோப்பாவில் ஒரு பெரிய போர் வெடிக்க கூடும் என்றும், பிரித்தானியா மோதலால் அழிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# இந்தியா குறித்த கடும் போக்கை மாற்றிக் கொண்டுள்ளாரா அநுர?

# புதுடில்லிப் பேச்சுக்களின் பின்னணியில் எழும் கேள்விகள்!

– ஆர்.பாரதி –

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயகவின் இந்திய விஜயமும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் அவர் நடத்திய பேச்சுக்களும் ஊடகங்களில் அதிக அளவுக்கு முக்கியத்துவம் பெற்றமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தன.

முதலாவது, அவர் இந்திய எதிர்ப்பை தமது பிரதான கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருந்த கட்சி ஒன்றின் தலைவர் என்பது. அந்தக் கொள்கையுடன் தான் அவர்கள் நீண்டகாலம் பயணித்திருந்தார்கள். அதன் மூலமாகத் தான் கட்சியையும் வலுப்படுத்தினார்கள்.

இரண்டாவது அவரது ஜே.வி.பி. ஒரு சீன சார்பு அமைப்பாக அடையாளம் காணப்பட்டிருந்தது. தேசிய மக்கள் சக்தி பொதுத் தேர்தலில் பெற்ற வெற்றி குறித்த கொழும்பிலுள்ள சீனத் தூதுவின் பிரதிபலிப்புக்களும் இந்தக் கருத்துக்கு வலுச் சேர்த்திருந்தது.

இலங்கையை மையப்படுத்திய சீன – இந்திய வல்லரசுப் போட்டி தீவிரம் அடைந்திருக்கும் பின்னணியில் மிகவும் நிதானமாக செயற்படும் இராஜதந்திரத்தை புதுடில்லி விஜயத்தின் போது ஜனாதிபதி திசநாயக்க வெளிப்படுத்தினார்.

தெற்காசிய பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை ஏற்றுக் கொண்டவராகவே திசாநாயக்கவின் அணுகுமுறை காணப்பட்டது. அதாவது, கடந்த கால ஜே.வி.பி.யின் வரலாறு எவ்வாறிருந்தாலும், இந்தியா குறித்த கடும் போக்கை ஜனாதிபதி மாற்றிக் கொண்டிருக்கின்றார் என்பது இந்த விஜயத்தின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

பிராந்திய ரீதியான பூகோள அரசியலை அனுசரித்துச் செல்ல வேண்டிய தேவை இருப்பதை உணர்ந்து கொண்டவராகவே ஜனாதிபதியின் தற்போதைய அணுகுமுறை உள்ளது.

ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் திசநாயக்க மேற்கொண்ட முதலாவது வெளிநாட்டு பயணமாக இந்த இந்திய விஜயம் அமைந்திருந்த நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதில் அது முக்கிய பங்கு வகித்தது. இந்த விஜயத்தின் போது பேசப்பட்ட விடயங்கள், இறுதியாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கை என்பனவற்றைப் பொறுத்தவரை, இலங்கை, இந்திய மற்றும் தமிழ் தரப்புக்கள் அதில் தமக்கு சாதகமான அம்சங்கள் என்ன உள்ளன என்பதிலேயே கவனத்தச் செலுத்தியிருந்தார்கள்.

இந்த விஜயத்தின் போது பின்வரும் ஐந்து அம்சங்கள் முக்கியத்துவம் பெற்றிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

முதலாவது, இலங்கையின் பொருளாதார ஸ்திரப்படுத்தல் முயற்சிகளுக்கு இந்தியா வழங்கிய உதவிக்கு ஜனாதிபதி திசநாயக்க நன்றி தெரிவித்தார். இரு நாடுகளும் வர்த்தகம், ஆற்றல், மற்றும் கட்டமைப்பு போன்ற துறைகளில் எதிர்காலத்தில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தின.

இரண்டாவது, இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்கும் வகையில் இலங்கை நிலம் பயன்படுத்தப்படாது என்று ஜனாதிபதி திசாநாயக்க உறுதியளித்தார்.

மூன்றாவது, இலங்கை, பிரிக்ஸ் (BRICS) அமைப்பில் உறுப்பினராக சேர்வதற்கான விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளும் மேற் கொள்ளப்பட்டன. இந்தியா அதற்கு சாதகமாக பதிலளித்தது.

நான்காவது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை அரசு தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் என்று நம்புவதாக தெரிவித்தார். இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக அமல்படுத்துவதற்கான வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார் அதேபோல் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்பதும் மோடியின் கருத்தாக வெளிப்பட்டது.

ஐந்தாவதாக, இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர் பிரச்சினைக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டது.

இலங்கையின் நிலப்பகுதி இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி திசநாயக்க வழங்கியுள்ள உறுதி மொழி புதுடில்லி எதிர்பார்க்கப்பட்ட முக்கியமான விடயம். இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலுடன் மூன்று மாதங்களுக்கு முன்னர் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதும் திசநாயக்க இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார். ஜனாதிபதித் தேர்தலை எதிர் கொண்டிருந்த நிலையில் அதனைத் தெரிவித்திருந்த அவர் தற்போது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள பின்னணியில், இந்தியப் பிரதமரிடமே அதனைத் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறான வாக்குறுதி ஒன்றை இந்தியா எதிர்பார்த்தமைக்கு காரணம் இருந்தது. சீனாவின் ஆய்வுக் கப்பல்கள் அடிக்கடி இலங்கை கடற்பகுதிக்குள் வந்து செல்வதும், கடலாய்வுகள் என்ற பெயரில் சீனத் தரப்பினர் மேற்கொள்ளும் செயற்பாடுகளும் புதுடில்லிக்கு எப்போதும் நெருடலைக் கொடுத்துக் கொண்டிருந்தது. இந்தியாவின் கவலைகளை யடுத்து வெளிநாட்டு ஆய்வுக் கப்பல்களுக்கு ரணில் விக்கிரமசிங்க ஒரு வருட காலத்துக்குத் தடை விதித்திருந்தார். அந்தத் தடை இம்மாதத்துடன் முடிவுக்கு வருகின்றது.



திசாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்தத் தடையை தொடருமா என்ற கேள்வி எழுப்பப்பட்டிருக்கும் நிலையில் தான், பொதுவான முறையில், இலங்கையின் நிலப்பகுதி இந்தியாவுக்கு எதிராக பயன் படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கியிருக்கிறார். இலங்கையின் முக்கிய துறைமுகங்களான கொழும்பு, அம்பாந்தோட்டை ஆகியவற்றில் சீனாவின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்கின்றது. இதனால், சீனாவின் செல்வாக்கை முற்றிலுமாக ஒதுக்க முடியாது என்ற கருத்தும் உள்ளது. சீனாவின் கப்பல்கள் வந்து செல்லலாம். ஆனால், அவை இந்தியாவின் பாதுகாப்புக்கு எவ்வகையிலும் குந்தகமாக அமையாது என்றவாறான ஒரு நிலைப்பாட்டை திசநாயக்க அரசாங்கம் எடுக்கலாம்.

இலங்கை, கடல்சார் சட்டங்களை (UNCLOS) பின்பற்றும் நாடாக இருந்தால், சீன கப்பல்களுக்கு முழுமையான தடைகளை விதிக்க முடியாத நிலையும் உள்ளது.

அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்குக்கு மத்தியில், சிக்கலான புவிசார் அரசியல் பரப்பில் கயிற்றில் நடப்பது போல மிகவும் நிதானமாக காய்களை நகர்த்த வேண்டியவராக ஜனாதிபதி திசநாயக்க இருக்கின்றார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் உருவாகிய பொருளாதார நெருக்கடியின் சில விளைவுகளை இன்று காண முடியா விட்டாலும், நெருக்கடி தீர்க்கப்படவில்லை. குறுகிய கால நீண்ட கால திட்டங்களின் அடிப்படையில் இதற்கான உபாயங்கள் வகுக்கப்பட வேண்டும். இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இரு நாடுகளின் உதவிகளும் அவசியம் என்பதை உணர்ந்து கொண்டவராகத் தான் ஜனாதிபதி திசநாயக்க காய்களை நகர்த்துகின்றார்.

தனது முதலாவது வெளிநாட்டு பயணமாக புதுடில்லி சென்ற ஜனாதிபதி, அடுத்த மாதம் சீனாவுக்கு செல்லவிருக்கிறார்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பொருளாதார மீட்சிக்கு இந்த இரண்டு நாடுகளையும் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது தான் அவர்களுடைய பிரச்சினை. அந்த வகையில், ஜனாதிபதியின் புதுடில்லி விஜயம் வெற்றி அளித்திருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். பொருளாதார ரீதியாக பயனுள்ள பல உடன்படிக்கைகள் பல எட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மூன்று முக்கியமான விஷயங்கள் எதிர்பார்க்கப்பட்டது. ஒன்று – இன நெருக்கடிக்கான அரசியல் தீர்வு. இரண்டு – மாகாண சபைகளுக்கான தேர்தல்களை விரைவாக நடத்துவது. மூன்றாவது – மீனவர் பிரச்சினைக்கு தீர்வு.

புதுடில்லி பயணமாக முன்னர் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவை ஜனாதிபதி அவசரமாகச் சந்தித்தது, வெறுமனே சிவஞானம் சிறிதரன் கேட்டுக்கொண்டமையால் என்று மட்டும் சொல்லி விட முடியாது. சில செயன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை இந்தியப் பிரதமருடனான சந்திப்புக்கு முன்னதாகக் காட்டுவதற்கும் ஜனாதிபதி விரும்பியிருக்கலாம். தமிழரசுக் கட்சியினரிடம் சொன்ன விடயங்களை இந்தியப் பிரதமரிடமும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.

அதன் அடிப்படையில் தான், தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேறும்படி இலங்கை அரசியல் அமைப்பு முழுமையாக செயல்படுத்தப்படும் என்று தன்னுடைய எதிர்பார்ப்பை இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார். 13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக குறிப்பிடாமல், அதனை அமுல்படுத்தலுக்கான ஆதரவான கருத்துகளை தான் பொதுவாக தெரிவித்தார். 13 ஆவது திருத்தம் மட்டுமன்றி 16 ஆவது திருத்தமும் இலங்கை இந்திய உடன்படிக்கையின் பின்னணியில் வந்ததுதான். அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துவது என்பது அவற்றை உள்ளடக்கியது தான்.

இலங்கை அரசியல் சூழல் மற்றும் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடந்த போதும், மோடி 13ஆம் திருத்தச்சட்டத்தை குறிப்பிட்டு பேசுவதை தவிர்த்தமைக்கும் காரணம் இருக்கின்றது. இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை பாதிக்காமல் தீர்வு காணும் முயற்சியாகவே இது விளக்கப்படுகிறது. அதேவேளையில், 13க்கு எதிராக ஜனாதிபதி திசாநாயக்கவின் கட்சி குரல் கொடுத்ததும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

13 ஆவது திருத்தத்தை தமிழ் மக்கள் நிரந்தரத் தீர்வாக ஏற்காமல் இருக்கலாம். ஆனால், தற்போதைய நிலையில், அதனையும் விட்டால், எதுவும் இல்லை என்பது தான் யதார்த்தம். இந்த டில்லியில் கூட்டறிக்கையில் சொல்லப்பட்ட விஷயங்கள் நடைமுறைப்படுத்தப்படுமா, என்பது தான் தமிழ் மக்கள் மத்தியில் எழும் கேள்வி!

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! தடைபட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.. உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்

ரிஷபராசி அன்பர்களே! வீண் மனகு ழப்பம் ஏற்பட்டு நீங்கும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் பெற முடியும். உத்யோகத்தில் கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினருடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.

மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் குறித்த காலத்தில் வெற்றி பெறும். மனம் ஒருநிலைப்படும். கவுரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமானபோக்கு காணப்பட்டாலும் பணவரத்து குறைவு இருக்காது.தொழிலில் கூட்டாளிகளுடன் அனுசரித் செல்வது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.

கடகராசி அன்பர்களே! மனோதைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும்.

சிங்கராசி அன்பர்களே! மன குழப்பம் நீங்கும். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவர்.

கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். பணியாளர்கள் உதவியும் கிடைக்கும்

துலாம்ராசி அன்பர்களே! சுபச் செலவுகள் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.

விருச்சிகராசி அன்பர்களே! மன நிம்மதி கிடைக்கும். புத்திசாதூர்யம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் பெறவும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யவும் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.



தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாட்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும்.


மகரராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. தன்மையாக பேசுவது நல்லது.

கும்பராசி அன்பர்களே! சுபச் செலவுகள் உண்டாகும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.

மீனராசி அன்பர்களே! எல்லாவிதமான முன்னேற்றமும் ஏற்படும். பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
**eelanadu.ca**
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# மரண அறிவித்தல்



**யாழ்.நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும்**
**ரொறன்ரோ கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த**

## திரு தேவராசா (ஜோசேப்) சூசைப்பிள்ளை

நாவாந்துறை யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், தற்போது ரொரொண்ரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த தேவராசா (யோசேப்) சூசைப்பிள்ளை அவர்கள் டிசம்பர் 29 ம் திகதி அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற மரியம்மா, சூசைப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற ஆச்சிமுத்து திரவியத்தின் மருமகனும்.

காலஞ்சென்ற இரத்தினம், காலஞ்சென்ற சேனதிராசா, அற்புதமலரின் அன்புச் சகோதரனும்.

மணியின் பிரியமான கணவனும்

மகேந்திரன், பாஸ்டர் நாவாய் மனோகரன், மாலா, வதனா, சாள்ஸ்றஸ், வனஜா, யூலியற், சுதா, ஸ்ரீவென்சன், காலஞ்சென்ற ஜக்சன், பெசில் ஆகியோரின் பாசமுள்ள தந்தையாரும்

காலச்சென்ற சாந்தா, லுசிண்டா, சீலன் டெலிமா, ஜான்ஸ் தேவதாஸ், சுதர்சினி, விக்டர், பிறேமினி, ராஜபிரியம் ஆகியோரின் அன்பு மாமாவும்.

சாலினி, மரோணா, ஏஞ்சல், தெபோரா, ஐசாயா, மத்தியாஸ், சகாரியா, நோவா, கொட்வின் யோசுவா, எஸ்தர், ஜெறமாயா, சரோமி, அபிசா, சஸ்கியா, சாம், திசோன், ரெபேக்கா, திசான், கெவின், கத்றின், ஸ்ரெவான், லிவியா, ஏறோன் (Aaron) கெசியா (Keziah). ஹறிஸா (Karissa) ஆகியோரின் பாசமிகு பேரனும்.

சோவியா (Sophia) ஷ்சைனா (Zyana), மெல்வின், ஜெஸ்சிலின் (Jesslyn), றவ்வாயல் (Raphael) ஐலா (Iyla), லேய்யா (Leiaa), டேவிட (David), ய்வானா (Ivana). ஹஷினி (ர்யளைநெ) ஆகியோரின் அன்புப் பூட்டனும்.

காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற இரத்தினம், ஸ்ரீபன், லூர்த்து ஆகியோரின் அன்பு மைந்துனருமாவார்.

384 Finley Avenue- Ajax ON- L1S 2E3 இல் அமைந்திருக்கும் Ajax Crematorium இல் ஜனவரி 03ம் திகதி வெள்ளி மாலை 5:00 முதல் 9:00 வரை அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு வைக்கப்பட்டு, மறு நாள் 4ம் திகதி சனிக்கிழமை 9:00 மணிக்கும் அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்பு 10.00 மணிக்கு ஆராதனை நடைபெற்று.

2505 Brock Road North- Pickering- ON- L1X 0K3 ல் அமைந்திருக்கும் Duffin Meadows Cemeteryக்கு அடக்கத்துக்காக எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவிப்பை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:- நாவாய் மனோகரன் 416 839 4349

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு வாங்க.. விற்க..
HOMELIFE HIGHER STANDARDS
Ravi. Paramu
Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001

TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*

# பிரகீத் எக்னெலிகொட கருணாவின் முகாமில் கொலை செய்யப்பட்டாரா?



பிரபல சிங்கள ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொட கோத்தபாயவின் உத்தரவில் கடற்படையினரால் கடத்தப்பட்டு கிழக்கில் படுகொலை செய்யப்பட்டமை அம்பலமாகியுள்ளது.

தற்போதைக்கு வெளிநாட்டில் வதியும், இலங்கைக் கடற்படையின் முன்னாள் சிப்பாயான பிரியசாந்தவின் தகவல்களின் பிரகாரம் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு, மட்டக்களப்பின் எருமைத் தீவில் கருணா முகாமில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்.

பிரகீத் எக்னெலிகொடவைக் கடத்திச் சென்ற குழுவில் எதிர்பாராதவிதமாக தானும் இணைக்கப்பட்டிருந்ததாகவும், அவரைக் கடத்திச் சென்ற போது அவர் ஊடகவியலாளர் என்பதோ, பிரகீத் எக்னெலிகொட என்பதோ தனக்குத் தெரிந்திருக்கவில்லை என்றும் குறித்த சிப்பாய் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் மட்டக்களப்பின் எருமைத் தீவுக்கு கொண்டு செல்லப்பட்ட பிரகீத் எக்னெலிகொடவின் தலையில் மூன்று துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டு அவர் படுகொலை செய்யப்பட்டதாகவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவின் உத்தரவின் பேரிலேயே படுகொலை நடத்தப்பட்டதாக அதற்குப் பொறுப்பாக இருந்த உயரதிகாரி தன்னிடம் தெரிவித்ததாகவும் கடற்படைச் சிப்பாய் பிரியசாந்த தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொடவின் தலையில் துப்பாக்கிச் சூடு நடத்திய ரில்வான் எனப்படும் கொலையாளியும் பின்னொரு காலத்தில் மர்மமான முறையில் வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்டதாகவும் பிரியசாந்த தெரிவித்துள்ளார்.

பிள்ளையான் மற்றும் கருணா குழுக்கள் மூலமே வடகிழக்கிலும் கொழும்பு உள்ளிட்ட தென்னிலங்கையிலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் இளைஞர்களும் சிங்கள செயற்பாட்டாளர்களும் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியிடப்பட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கோட்டாபய அரசாங்கத்தின் காலப்பகுதியில் சட்டத்துறை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மையினை விசாரணை செய்து தற்போதைய அரசாங்கம் வெளிக்கொணர வேண்டும் என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜோசப்பரராஜசிங்கம் அவர்களின் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்த பிள்ளையான் அவர்கள் கோட்டாபயவின் காலப்பகுதியில் விடுதலை செய்யப்பட்டார். பிள்ளையானுடன் இருந்த அசாத் மௌலானா என்பவர் சுவிஸ் அல்லது பிரான்ஸ் சென்று அங்கிருந்து பல்வேறு உண்மைகளை சொல்லியிருந்தார். அது தொடர்பாக சர்வதேச தொலைக்காட்சியொன்று தொகுப்பு ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் பிள்ளையான் அவர்களை விடுதலை செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் எவ்வாறு சிலரை இடமாற்றினார்கள் என்று அந்த காணொளியில் சொல்லப்பட்டது. அன்று நீதி அமைச்சராகயிருந்த அலிசப்ரியின் வழிகாட்டலில்தான் நடை பெற்றது என்று சொல்லப்பட் டது. பிள்ளையான் விடுதலை செய்ததன் காரணமாக கோட்டபாய ஆட்சியில் எங்களுக்கு நீதி கிடைக் கும் என்று நம்பவில்லை எனவும் சாணக்கியன் மேலும் தெரிவித்தார்.

## அதிகளவானோர் இலங்கையை விட்டு வெளியேறிய ஆண்டாக 2024 பதிவு

2024ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் அதிகளவானோர் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென்ற ஆண்டாக பதிவாகியுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தில் 312,836 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது.

185,162 ஆண் தொழிலாளர்களும் 127, 674 பெண் தொழிலாளர்களும் இவ்வாறு தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் 2022ஆம் ஆண்டு அதிகளவானோர் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றதாகவும், கடந்த 6 வருடங்களில் 13 இலட்சம் இலங்கையர்கள் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணியாளர்களாகச் சென்றோராவார்.

இது இவ்வாறிருக்க வெளிநாடுகளில் இருந்து போதைப்பொருளை தருவித்து விநியோகம் செய்வதில் ஈடுபட்ட ஸ்பெயின் பிரஜையொருவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் காலியில் நடைபெற்றுள்ளது.

காலி பொலிசாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் பிரகாரம் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து 4 கிராம் கொக்கேன் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து தபால் பொதிகள் ஊடாக போதைப் பொருளைத் தருவித்து விநியோகம் செய்வதில் சந்தேக நபர் ஈடுபட்டிருந்தமை விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அத்துடன் விநியோகம் செய்வோரை பொலிசார் தேடி வருகின்றனர்


வானிலை கணிக்கக்கூடியது ஆனால்
உங்கள் எதிர்காலம் அப்படியல்ல
எங்கள் நோக்கம் உங்கள்
எதிர்காலத்தை பாதுகாப்பது
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
LIFE INSURANCE | CRITICAL ILLNESS | DISABILITY INSURANCE
NON-MEDICAL INSURANCE | SUPER VISAS | RRSP & RESP

WE TRULY CARE FOR YOU &
YOUR LOVED ONES!
647 401 5800 ajithinsurance.ca ajithsaba@gmail.com
10 Thornmount Dr, Scarborough, Ontario M1B 3J4